T.D. 76992

பெண்ணுரிமையும்
மதமும்

Y15(Q)
N35.
76992.
99
52

# பெண்ணறிவுடைமை
# மகிமை

ஆக்கியோன்

[illegible]

வெளியிட்டோர்

[illegible] பட்டணம் [illegible]

[illegible]

Y15 (Q)
N35
76992

செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
மாதம் ஆகஸ்ட் வருடம் 1990
செப்பனிட்டு முடித்த ஆகஸ்ட்
மாதம் 1990 வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்

# பெண்ணுரிமையும் மதமும்.

7 - JUL 1935
MADRAS

ஆக்கியோன்:

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழக அமைச்சரும்,
பெண்ணை நிந்திக்கும் சயவர்கள் யார்? என்னும் நூலின் ஆசிரியரும்,
தமிழ்ப் பண்டிதருமான,

தோழர், அ. இராகவன்.

வெளியிடுவோர்:

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்,
ஈரோடு.

விலை] 1935. [அணா 3.

861
301.423
76992



# அட்டவணை.


| | விஷயம். | பக்கம். |
|---|---|---|
| 1. | முன்னுரை. ... ... ... | ... |
| 2. | ஜீவகாருண்ய சமயம் மகளிர் உரிமையை மறுக்குமா? | 1 |
| 3. | சைவம் ... ... ... | 2 |
| 4. | பெண் கல்வி ... ... ... | 9 |
| 5. | மணம் ... ... ... | 12 |
| 6. | இளமை மணம். ... ... | 15 |
| 7. | கர்ப்பத் தடை ... ... | 17 |
| 8. | காதல் ... ... ... | 19 |
| 9. | விவாக ரத்து ... ... | 26 |
| 10. | உடையும் முடியும் ... ... | 31 |
| 11. | நகைகள் ... ... ... | 38 |
| 12. | விதவை மணம் ... ... | 40 |
| 13. | பதியிலார் (வேசிகள்) ... ... | 46 |
| 14. | சொத்துரிமை ... ... | 54 |

# பிரசுரிப்போர் முன்னுரை.

ஜீவகாருண்யசமயம் மகளிர் உரிமையை மறுக்குமா? என தோழர், அ. இராகவன் அவர்களால் "குடி அரசில்" எழுதப்பட்ட கட்டுரைகளையெல்லாம் தொகுத்து வெளியிடப்பட்டதே இந்நூலாகும்.

இதில் ஜீவகாருண்ய மதங்கள் என்று கூறிக்கொள்ளும் பல மதங்கள் பெண் மக்களுக்கு இழைத்து வரும் கொடுமைகளைத் தெள்ளத் தெளிய விளக்கப்பட்டிருக்கிறது.

இந்நூலை வெளியிட அனுமதி நல்கிய குடி அரசுப் பத்திரிகை சொந்தக்காரருக்கு நமது மனமார்ந்த நன்றியுரித்தாகுக.

ஈரோடு,
26—3—35.

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.

உண்மை விளக்கம் பிரஸ்,
ஈரோடு.

# ஜீவகாருண்யச் சமயம் மகளிர் உரிமையை மறுக்குமா?

இவ்வுலக ஆக்கத்திற்கே நிலைக்களனாய் விளங்கும் பெண்மக்களுக்கு உரிமை வழங்கவேண்டுமா? வேண்டாமா? என்னும் ஓர் பெரும் ஆராய்ச்சி நமது இந்திய நாட்டிலே இப்பொழுது பெரிதும் நடைபெற்றுவருகின்றது. இதைக்கண்டு, "ஆணின் மறுபாதியாகிய, பெண்ணிற்கு அவர் தம் நியாயமான உரிமைகளை வழங்க, இத்தனை ஆராய்ச்சியா? பெண்ணின் உரிமையை மறுக்கும் இந்தியருக்கு ஆங்கிலேயர் எப்படி உரிமை வழங்க இசைவர்" என்று பிறநாட்டறிஞர் பலர் எள்ளி நகையாடுகின்றனர். யாண்டு பெண்டிர், உரிமை குன்றி அடிமை வாழ்க்கையில் அழுந்திக் கொண்டிருக்கிறார்களோ ஆண்டுதான் சமுதாயம் முழுவதும் குன்றி வருகின்றதென்பது அறிஞர்கள் கண்ட அநுபவம். இருபாலரும் உரிமையெய்தி சமத்துவமாய் ஒத்து வாழும் சமூகந்தான் உயர்வடையும். இந்நில உலகிலே பெண்சாதியின் உரிமையை விலங்குகளும் கூட மறுக்காதிருக்கும்பொழுது ஆறறிவுடையதென்று கூறும் மனிதர்கள் மகளிர் உரிமைக்குக்கேடு சூழ்ந்து வருவது எத்துணை கொடுமையாகும். இது பற்றியே அறிஞர் ஒருவர்.

"பெண்ணுரிமைக்குக்கேடு எவ்வுலகில் விளைந்திருக்கிறது? அஃறிணையுலகிலா? ஆறறிவுடைய மக்கள் உலகிலா? வெட்கம்! வெட்கம்! புல் செடி கொடிகளில் ஆணினம் தன் பெண்ணினத்தின் உரிமை தகைத்திருக்கிறதா? ஆண் பறவை பெண் பறவையின் உரிமை கெடுத்திருக்கிறதா? எவ்விலங்காகிலும் தனது பெண்ணினத்தின் உரிமையை உடைத்திருக்கிறதா? அஃறிணை உலகில் பெண்ணுரிமைக்குப் பழுது நிகழ்ந்ததில்லை. பகுத்தறிவுடைய உயர்திணை உலகிலே அவ்வுரிமைக்குப் பழுது நேர்ந்திருக்கிறது" என்று கூறியுள்ளார்.

## சைவம்.

உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் பெண்களுக்கு உரிமை நல்கிய பின்னரே சுதந்திர மெய்திச் சுகவாழ்வு பெற்றதென்பது சரித்திர வாயிலாய் நாம் காணும் உண்மை. அஃதிவ்வாறிருக்கும் இந்திய நாட்டின் விடுதலைக்கென்று உழைக்கும் ஒரு பெரும் தேசீய மஹாசபை பெண்ணுரிமையை ஒரு சிறிதும் பேணாது இந்திய நாட்டின் சுதந்தரத்தை எளிதில் பெற்றுவிடலாமென்று எண்ணுவது எத்துணை குறுகிய நோக்கமானது என்று அறிக.

அத்தேசீய மஹாசபையில் பெண்ணிற்கு உரிமை நல்கக்கூடிய ஒரு திட்டமும் இல்லாமையானும் பெண்ணுரிமையை வேரறுக்குமா? தலைவர்களின் ஆட்சியின் கீழ் அம்மகா சபை அகப்பட்டுக் கொண்டிருத்தலானும்



அம்மகா சபை இந்திய நாட்டிற்கு விடுதலையைக்கொண்டு வரமுடியாதென்றும், அஃது ஒரு சமயம் விடுதலையைக் கொண்டு வந்தாலும் அது உண்மையான விடுதலையாகா தென்றும் அறிந்தே ஆங்காங்கு பெண்ணுரிமை பேணும் பல பல இயக்கங்கள் தோன்றின. அத்திறத் தாற்போன்று ஆங்காங்கே ஆடவர்களின் எதிர்ப்பை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது கல்வி கற்ற ஒரு சில பெண்மணிகள் தங்கள் ஜாதியின் உரிமைக்குப் பாடுபட ஆரம்பித்தார்கள். ஆனால் கடவுள், வேதம், சமயம், சமயத் தலைவர் முதலியன பலவும் பெண்கள் உரிமைக்கு எதிரிடையாக இருக்கவே அவைகளெல்லாம் அன்னோர் மறுக்கவோ, எதிர்க்கவோ, அழிக்கவோ, ஆற்றலற்று அவ்வியக்கங்களெல்லாம் மாய்த்தொழிந்தன. சீர்திருத்த விருப்பங்கொண்டு முன்வந்த செல்வியர் பலரும் செல்வாக்கிழந்தனர். இதன் பிறகுதான் தன்னந்தனியராய் தனிகர் ஈரோட்டு இராமன் தன் மதிப்பியக்கம் எனும் தனிப் பேரியக்கங் கண்டார். அது பெண்ணுரிமையாகிய மறுமணம், காதல் மணம், சொத்துரிமை, விவாகரத்து, பாலிய விவாஹ மறுப்பு முதலிய விழுமிய கொள்கைகளை தம் நோக்கமாகக் கொண்டுழைக்க ஆரம்பித்ததோடு தம் கொள்கைகளுக்கு எதிரிடையாக இருக்கும் கடவுள், வேதம், சமயம், சமய ஆச்சாரிகள் முதலிய பலவற்றையும் எதிர்த்து அவைகளை எல்லாம் நிர்மூலப் படுத்துவதும் தம் கொள்கையென்று சொல்லவே அறிஞர் பலர் தாராளமாய் வந்து ஆதரிக்கவும் எளிதில் நாடெங்கும் பரவவும் ஆரம்பித்து நாட்டில் அதன் செல்வாக்கு உயரவே ஒவ்வொரு சமயத் தலைவரும் "எனது சமயந்தான் பெண்ணுக்கு பெரிதும் உரிமை நல்கிய சம

வம்" "எனது மதந்தான் பெண்ணின் உரிமையை வழங்கும் மதம்." என்று கூப்பாடு போட ஆரம்பித்தார்கள். ஆனால் ஸ்மார்த்த சமயத் தலைவர்களோ பகிரங்கமாய்த் தம் சமயம் பெண்ணுரிமைக்கு எதிரிடையாயிருக்கின்றது. என்று கூற ஆரம்பித்துவிட்டார்கள். உண்மையில் அஃதோர் சிவகாருண்ய மதமுமன்று. ஆதலால் தனி மதிப்பியக்கத்தாரால் அம்மதம் அதி சீக்கிரம் அழிக்கப்படவேண்டியது அவசியமே. ஆனால் உலகிலுள்ள பல்வேறு மதங்களிலும் "சிவகாருண்ய நெறியைத் திறம்பட பேணும் சமயம் சைவமே" என்று கூறப்படும் செந்தமிழ் நாட்டின் தென் கோடியிலுள்ள ஒரு சில மக்களால் அனுஷ்டிக்கப்படும் சைவ சமயத்தை ஆராய்ந்தாலோ,

"எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்
இலங்குமுயிர் உடலனைத்தும் ஈசன் கோவில்"

என்று கூறப்படுகிறது. எனவே எல்லா உயிரினிடத்திலும் ஈசன் வீற்றிருப்பதால் எல்லா உயிர்ப் பிராணியையும் ஈசனென எண்ணி (தன்னுயிர் போல் எண்ணி) வாழ்தல் சைவர்களின் கடப்பாடாயிருக்கிறது. இச் செய்யுளைப் பார்த்து நாம் மகிழ்வதோடு சைவர்கள் தங்களால் போற்றப்படும் கடவுளை ஒரு பெண்ணாகக் கண்டு வணங்குவதும் மகிழத்தக்கதே. எடுத்துக்காட்டாக.

"காணும் பல பல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் பல பல பொன்போலத் தோன்றிடும்
பேணும் சிவனும் பிரமனும் மாயனும்
காணும் தலைவி தலைவி நற்காரணிகாணே"

(திருமந்திரம்)



என்ற செய்யுளும் "சத்தியாய் சிவமாகி" என்ற செய்யுளும் இன்னும் பலவும் ஆதாரமாகக் காட்டப்படுவதோடு செல்வத்தைக் கொடுக்கும் கடவுள் "லக்ஷ்மி" என்று கூறும் தெய்வம் பெண்ணாகவும் கல்வியைக் கொடுக்கும் கடவுள் "சரஸ்வதி" என்னும் தெய்வம் பெண்ணாகவும் இன்று வரை சைவர்களால் போற்றப்படுவதாகவும் இன்னோரன்ன பல உதாரணங்களை எடுத்துக் காட்டலாம். பெண்ணுரிமையைப் பெரிதும் ஏற்றிப் போற்றும் சைவப்புலவர் உயர் திரு கலியாணசுந்தர முதலியாரவர்களும்,

"பெண்மை என்பது அமைதித் தன்மை என்று மேலே சொல்லப்பட்டது. அமைதி நிலை இறைமை என்பது. அவ்விறைமையுடைய தாயை வெறும் பெண்ணென்று கூறுவது? கூடாது. அவளைப் பெண் தெய்வமென்று போற்றுதல் வேண்டும். பெண் தெய்வம், பெண் தெய்வம், பெண் தெய்வம்."

"முழுமுதற் பொருள் தண்மை வெம்மையெனும் இரண்டு சக்திகளாக உலகை இயக்குகிறது என்று நூல் தொடக்கத்தில் குறிக்கப் பட்டிருக்கிறது. அத்தண்மையின் கூறு பெண் உலகு. பெண் பிறந்து, உலக வளர்ச்சிக்குத்துணை புரிந்து மீண்டும் அத்தண்மைத் தெய்வமாகிறாள்."

"பெண் மகளாகத் தோன்றினாள் மனைவியாக வாழ்ந்தாள், தாயாகத் தொண்டு செய்தாள், இப்பொழுது தெய்வமாகக் காட்சியளிக்கிறாள். உலகீர்! அக்காட்சி காணுங்கள். தெய்வம் தெய்வமென்று எங்கு ஓடுகிறீர்? நூற்களை ஏன் ஆராய்கிறீர்? இதோ தெய்வம், பெண்

தெய்வம், காணுங்கள் கண்டு வழிபடுங்கள். பெண்மை என்பு தோல் போர்த்த உடலன்று. அவ்வுடலுள்ளே யுள்ள நுண்மை இறைமை பெண்மை என்க. அத்தகைய பெண்மை வாழ்க" என்று கூறியுள்ளார்.

பெண்ணைத் தெய்வமாகக்கொண்டு தொழும் சைவர் பெண்ணிற்கு எத்தகைய உரிமையைக் கொடுத்துள்ளார்கள்? தெய்வத்தைக் கல்லாக (விக்ரஹமாக) வைத்துத் தொழும் சைவர் பெண்களையும் அவ்வுணர்ச்சியற்ற கல்லை (தெய்வமாக) எண்ணி பெண்டிர் துணைவனை யிழந்தால் உணர்ச்சியற்ற கல் தெய்வம்போல் நடத்திவருவதும், அக்கல் தெய்வம்போல் எண்ணி பெண்ணிற்கு கல்வி கற்றுக் கொடுக்காமலும், பசித்தால் சாப்பிட வழியற்றும், தம் மிஷ்டம் போல் விரும்பிய இடத்திற்குச் செல்லவிடாது வீட்டிற்குள் பூட்டி[ வைத்திருப்பதும், பெண்களை மிக இழிவாய் நடத்தி வருவதும் பெண்களைக் கல்லாக (தெய்வமாக) [திரு. வி. கலியாண முதலியாரவர்கள் கூறியபடி போற்றி வருகிறார்களென்பதும் மெய்யே. இதைத் தவிர பெண்ணிடம் சைவர்கள் எத்தகைய சிவகாருண்யமும் காட்டவில்லை என்பது நாம் அறிந்த உண்மையாகும். பட்டிலும் பாட்டிலும் பெண்டிற்கு சைவம் உரிமை கொடுத்திருக்கிறது" என்று செய்யுளின் பொருளைப் புரட்டிப் பண்டிதர்கள் கூறலாமேயொழிய சைவர்கள் பெண்களிடத்தில் சிவகாருண்யம் காட்டவில்லை என்பது மட்டுமல்ல. பெண்களிடத்தில் சிவகாருண்யம் காட்டி அவர் தம் உரிமைக்காக பாடுபடும் அறவோர்களையெல்லாம் நிந்தித்து அவர்களால் ஆற்றப்படும் சிவகாருண்ய தொண்டிற்குத் தங்களாலியன்ற இடையூறியற்றி வருவதோடு விதவா விவாஹம், கலப்பு மணம் முதலியன புரி



யும் வாலிபர்களைச் சமூகப் பகிஷ்காரம் செய்யவும் அவர்களுக்குத் தங்களாலியன்ற இன்னல்கள் பல புரிந்து வருவதும் அனுபவத்தில் நாடோறும் நாம் கண்டுவரும் மறுக்கமுடியா உண்மையாகும்.

சைவத்தின் பெருமையை இடைவிடாது புகழ்ந்து வரும் சைவர்கள் வீட்டிலே பெண்கள் விலங்கினும் கடையராய் இன்றளவும் மதிக்கப்பட்டு வருகிறார்களென்றால் அது ஒரு சிறிதும் மிகையாகா. ஒவ்வொரு சைவன் வீட்டிலும் பெண்மணிகள் கணவன் சாப்பிட்ட எச்சில் இலையிலேதான் சாப்பிடவேண்டும் என்பது கட்டாய விதி. இவ்விதி பெண்கள் திருமணஞ் செய்யப்பட்ட நாளிலிருந்து அவளிறக்கும் பரியந்தம் செய்ய வேண்டிய முக்கிய கடமைகளிலொன்று. இதுவே கற்புடைய பெண்டிரின் "இலக்ஷணமாகும்." கணவன் எச்சிலையில் மனைவி சாப்பிடுவதே அவள் கற்பிற்கும், அவன் அனுபவிக்கப்போகும் மோக்ஷத்திற்கும் வித்தாக இருப்பதினால்தான் எச்சிலை சோற்றிற்காக புருடன் வந்து சாப்பிடும் வரை மனைவி காத்திருக்கவேண்டும். புருடன் பல அசந்தர்ப்பங்களால் சாப்பிடவேண்டிய நேரத்திற்கு 3, 4-மணி கழித்து வந்தாலும் பெண் பசியால் எத்துணை சோர்வுற்றாலும் புருடன் வரும் நேரத்தை எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கவேண்டியதே அந்தோ! சைவர்கள் வீட்டில் பெண்டிரிடம் எத்துணை சிவகாருண்யம் காட்டப்படுகிறது. வெட்கம், வெட்கம் இச் சிவகாருண்யமற்ற கொடுஞ் செயலை யொழிக்க எந்தச் சமயத் தலைவராவது முயன்றனரா? எந்தச் சைவப் பத்திரிகையாவது கிளர்ச்சி புரிந்ததா? இல்லை, இல்லை.

இன்னும் பல சைவர்கள் வீட்டில் புருடன் அயலூருக்குச் சென்றிருந்தால் அவன் சென்றிருக்கும் திசைக்கு நேராகக் கால் நீட்டி படுத்தலும் கூடா. அவன் ஊரிலில்லாத சமயம் நல்ல சேலையும், பூவுமணிந்து திலதமும் இடக்கூடாதாம். இக்கட்டுப்பாடுகள் பட்டினங்களில் வசிக்கும் சைவர்கள் வீட்டில் குறைந்திருந்தாலும் கிராமங்களில் (சைவர்கள் வீட்டில்) இன்றளவும் நடந்தே வருகிறது. இன்றும் கணவன் பெயர், மாமன், சின்ன மாமன், பெரிய மாமன், மாமி, சின்ன மாமி, பெரிய மாமி, மைத்துனன் கொழுந்தன் முதலியோர்களின் பெயர்களைக்கூடக் கூறக்கூடாது. உதாரணமாக நமது பாட்டியாரின் கணவன் பெயர் கணபதியா பிள்ளை, அதினால் எனது பாட்டியார் கண், கல், களவு, கம்பு முதலிய எந்த வார்த்தைகளையும் கூறார். கந்தசாமி என்று கூற வேண்டுமானால் திருச்செந்தூர் சாமி பெயரைச் சொல்லு என்பார்; ஷண்முகமா? என்றால் இல்லை என்பார் பின் வேலாயுதமா? என்றால் அதுவும் இல்லையென்பர். அதன் பிறகு சிறிது யோசித்து இராமசாமி பிள்ளையின் மூத்த மகன் பெயரைச் சொல் என்பார். கந்தசாமி என்று சொல்லிவிட்டால் அவ்வம்மையார் தான் பி.ஏ, பரீக்ஷையில் தேறிவிட்டது போன்று மகிழ்ந்து ஆமாம் அப்பெயர்தான் என்பார். சைவர்கள் இத்தகைய மூடக் கட்டுப்பாடுகளுக்குள்ளே தம் வீட்டுப் பெண்களை வைத்துக்கொண்டு எமது சமயந்தான் பெண்டிர்க்குப் போதிய உரிமை நல்கியிருக்கிறது என்று கூப்பாடு போடுவதில் யாது பயன்.



# பெண் கல்வி.

பெண் உரிமைக்காக ஆண்மக்கள் அதிகமாய் உழைக்கவும், அதற்காகப் போராடவும் மேனாடுகளில் நாம் அதிகமாய்க் காண முடியா. பெண்களே தம் உரிமைக்காக தைரியமாய் முன் வந்து போராடுகின்றார்கள். காரணம், அவர்கள் கல்வி கற்றவர்களாயிருப்பதே. நமது நாட்டிலே சைவத்திருநெறியைச் சேர்ந்த கொடியர்கள் முதலாவது பெண் கல்வியின் வாயில் மண்ணையள்ளிப்போட்டு மகளிரை விலங்காக்கி-என்-பிள்ளை பெறும் யந்திரமாக்கி தங்கள் வழியிலாட்டி கணவன் மொழியே வேதவாக்கென்று கடைபிடித் தொழுகும்படி செய்துவிட்டனர். கல்விக்குத் தெய்வமாகிய "சரஸ்வதி" யம்மாளின் சாதியார்களாகிய பெண்டிர்கள் இன்று நிரக்ஷரகுக்ஷிகளாய், மூடர்களாய் வாழ்ந்து வருகின்றார்கள். இன்று சீர்திருத்த வாதிகளின் இடைவிடா உழைப்பின் பயனாய் பெண் கல்விக்கு எதிரிடையாக வாதிப்போர் தொகை குறுகி விட்டதென்றாலும் சைவர்கள் தம் பெண்மக்களுக்கு நன்றாய்க் கல்வி கற்பிக்க முயற்சிக்கின்றார்கள் என்று கூறமுடியாது. சைவர்கள் பெண் கல்வியில் சிரத்தை கொண்டிருந்தால், பணக்காரச் சைவர்கள் மிகுந்த சைவக்கோட்டையென்று கூறப்படும் திருநெல்வேலி ஜில்லாவில் பெண்களுக்கென்று ஒரு ஹைஸ்கூலாவது இல்லாதிருக்குமா? சிறு ஜனத்தொகையையுடைய கிறிஸ்துவர்களுக்கென்று எத்தனை காலேஜ், எத்தனை ஹைஸ்கூல்கள் எத்தனை ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்கள். ஏழைக் கிறிஸ்துவர்கள் மிகுந்த இத்திருநெல்வேலி ஜில்லாவிலே

எத்தனை பி. ஏ. பட்டம் பெற்ற பெண்கள். எத்தனை ஸ்கூல் பைனல் படித்த பெண்கள், நூற்றுக் கணக்காய்-என் ஆயிரக்கணக்காயிருக்கின்றார்கள். இந்த ஜில்லாவில் சைவப்பெண்களில் எத்தனைபேர் பி. ஏ. பட்டம் பெற்றிருக்கின்றார்கள் என்று வினவில் சைபர் (0) என்றுதான் கூறவேண்டும். சில நண்பர் குலசேகரன் பட்டினத்தைச் சேர்ந்த அறிஞர் சி. டி. நாயகம் அவர்கள் தம்மகளை பி. ஏ. பட்டதாரியாக்கி யிருக்கிறார்கள் என்று கூறலாம். அப்பெரியாரும் அவர் தம் துணைவியாரும் சைவ மனப்பான்மை யுடையவர்களாயிருந்தால் ஒரு பொழுதும் தம் புதல்விக்கு இத்தகைய உயர்தரக்கல்வியை யூட்டியிருக்க மாட்டார்கள். அவர்கள் உண்மையான சுயமரியாதை வீரர்களின் மனப்பான்மை யுடையவர் களாயிருந்ததினால் தான் தம் புதல்வி உயர்தரக்கல்வி பெறச் செய்தனர். இப்பொழுது அதுபோல் ஏனைய பெண்களும் கல்விபெற உழைத்து வருகின்றார்கள். அவ்வழியில் அரும்பாடுபட்டு வரும் ஸ்ரீமதி சி. டி. நாயகம் அவர்களுக்குப் பெண்களுலகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளது. அஃதல்லாமல் திருநெல்வேலி ஜில்லாவிலே ஸ்கூல் பைனல் பாஸ் பண்ணிய பெண்மணிகள் இரண்டு மூன்று பெயராவது இருப்பார்களா? என்பது, சந்தேகம். ஆங்கிலக் கல்வியில்லாமல் தமிழிலாவது கசடறக்கற்று பெண்கள் உரிமைக்காக சொற்பொழிவு களாற்றத்தக்க சில பெண்மணிகளும் கூட இரார்கள் என்பதே எனது திடமான அபிப்பிராயம். இந்த நிலையில் சைவர்களிருந்து கொண்டு தங்கள் சமயம் பெண் கல்விக்கு ஆதரவு கொடுக்கிறதென்றோ, சைவர்கள் பரந்த நோக்கமும் சிவகாருண்யக்கொள்கையுமுடையவர்கள் என்றோ கூறல் வீண் பிதற்றலேயாம். மக்களினத்தை விலங்கினமாக்கும், ஒரு கூட்டத்தார் எங்



வளம் சிவகாருண்ய முடையவர்களாவார். வள்ளுவர், சைவர்களில் திருமுறைகளிலொன்றாக கூறும் திருக்குறளில்

'விலங்கொடுமக்களனையர்
இலங்குநூல் கற்றாரோடேனையவர்'

என்று கூறுவதை அறிந்தாவது விலங்குத் தன்மையை யுடைய கல்லாத பெண்ணுலகை கல்வி மயமாக்க முயற்சிப்பார்களாக. அஃதன்றி பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் சைவம் எத்துணை உரிமை நல்கியிருக்கிறது. 'தலைமையைப்பார், காலக் காலம் மையைப்பார்' என்று வாய் வேதாந்தம் பேசி நாட்டை ஏமாற்றுங்காலம் மலையேறிப்போய் விட்டதென்று அறிந்து பெண் கல்விக்கு உழைப்பார்களாக. சைவர்கள் பேச்சிலும், எழுத்திலும் வல்லவர்கள் தான், செய்கையில் அன்னோர் சைபர் (0) என்று உலகம் பரிகசிக்கும் இழிந்த பட்டத்தை மாற்ற ஆங்காங்கு முயற்சிப்பார்களாக.

சைவச்சோதரர்களே! நீங்கள் மகளிர்க்கு எந்த உரிமையையும் கொடுக்க வேண்டாம் ஆங்காங்கே பெண்கள் "ஹைஸ்கூல்கள்" ஏற்படுத்தி கல்வியைப் பரப்பிவிடுவீர்களாயின் நீங்கள் பெண்களுக்குரிய எல்லா உரிமையையும் நல்கிய அறிவோர்களாவீர்கள். ஓர் ஆண்டிற்கு பெண் சாமிகளுக்குக் கொடுக்கும் காணிக்கை, நகை, அபிஷேகச் செலவுகள், பட்டாடை, திருக்கலியாணச் செலவுகளனைத்தையும் நிறுத்திவிட்டு அதில் மிச்சப்படும் பணத்தைப் பெண் கல்விக்குச் செலவழிப்பீர்களாயின் உங்கள் வீடுகளிலெல்லாம் "சரஸ்வதி என்னும் தெய்வத்தை" காணலாம், அதல்லாமலும் எத்தனை ஆண்டுகள் பூஜித்தா

ளாய் நீங்கள் சரஸ்வதியைக் காணமாட்டீர்கள். சரஸ்வதியென்னும் தெய்வத்திற்கு சுயமரியாதை கிடையாதா? உண்டு அதினால்தான் நீங்கள் எத்துணை அன்புடன் பூஜித்தாலும் தனது ஜாதியாராகிய பெண்களின் கல்வி உரிமைக்குப் பங்கமியற்றும் ஆண்களின் கண்களின் முன் தோன்றாமலிருக்கின்றாள் என்று கூறுவது மிகையாகாது.

## மணம்.

ஒரு ஆடவனும், ஒரு பெண்ணும் இவ்வுலக வாழ்க்கையில் ஒற்றுமையோடும், ஒருவருக்கொருவர் உதவி செய்து, சமத்துவமாய் வாழ இருவரும் மன ஒருமையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தமே திருமணம் என்று வழங்கப்படுகிறது. இத்திருமண விஷயத்தில் பெரிதும் ஆண் மகனுடைய உரிமைதான் கவனிக்கப்படுகிறதே தவிர, பெண் மக்கள் உரிமை கவனிக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, அப்பெண்டிர் உரிமை முற்றும் பறிக்கப்பட்டு, முன்பின் அறியா ஒரு ஆண்மகனுக்கு அடிமைப் படுத்தப்படுகிறாள் என்று தான் கூறவேண்டும். பண்டைக் காலத்திலே சைவர்கள்—இல்லை—தமிழர்கள் திருமண விஷயத்தில் மகளிர்களுக்கு சமத்துவமான உரிமையை நல்கியிருந்தனர் என்று பல தமிழ் நாட்டறிஞர்கள் சாற்றுகிறார்கள்.

உயர் திரு. சோமசுந்தர பாரதியார் அவர்கள், "வாழ்க்கைத் துணைவரில்லாக் காலத்தில் வந்த பகைவரை எதிர்த்துச் செருமுனையிற் பொருத மகளி



ரையும் தேச நன்மை செய்தவுபகாரிகளாகவே தமிழுலகம் போற்றியிருக்கிறது. புறத்துறைகளிற்றோள்வலியாலும், தாளாண்மையாலும் மானுந் தன்மைக்குரிமை பற்றியாடவராயினோர், தம்மனையறஞ் சிறக்க இல்லத்தையாளும் பெட்புடைமையார் பேணத்தகும் பெண்டிரைப் பெரிதும் மதித்தும் பாராட்டிப் பேணல் கடன். இத்தகை பற்றியே மெல்லியலாரைப் பெண்மைத்திறஞ் சிறந்தல் காட்டிப் பெண்டிரென வியந்து பேணிப் பேசியதென்ப வான்றமிழ் வாணர்; எனவே தமிழகத்தில் அடிபட்ட நல்ல முறைப் பெண்டிர் புருடரோடொக்க நன்கு மதிக்கப்படுவதேயாமென்பது தெளிவாகும். இளமை மணம், மறுமண மறுப்புகளாற் பெண்டிற் பீடிக்கப்படுந் தற்காலக் குறைவுகள் பண்டைத் தமிழ் வழக்கின்றி யிடைப்பிற வாலாறுயெழுந்துள்ளன; கைமை நோற்றுஒன்றி வாழுமுயவற் பெண்டிருமல்லேம்; காதலனிறந்ததற்காக நீர்வீழ்ந்தும், நெருப்பு புகுந்தும் சாப்பான கைமை தவிர்க்கவேண்டும் சிறுமைப் பெண்டிருமல்லேம்; துணைவனுயிர் துறத்தலறிந்தவுடன் உயிர் தானே கழியும் சீர்முறையுடையேம் நாமென்று, செயலின்றி விருப்பாலுயிர் துறக்கவல்ல கற்பரசிகளிருந்த (அத்தகைய கற்பரசர்கள் எங்கு சென்றனர்? ஆண் பிள்ளை சிங்கங்களுக்கு கற்பெதற்கு என்று கூறும் தற்காலத்திய கொள்கை அக்காலத்திலும் இருந்ததுபோலும்) தமிழ் நாட்டில் மனைவினைப் பொருளுமறியா இளமைக் காலத்தில் மகளிரையவர் விருப்பமறியாமல் மணம் புகுத்தி, வாழ்க்கை மணமறிய மலராமுன் கைமைச் சிறைக் கிறையாக்குவது, அறத்துறைக்கடாததுபோலவே தமிழ் முறைக்கு முறணுவதேயாம்"

என்று மிக அழகுபடக் கூறியுள்ளார். இவைகளிற் பல நமக்கு உடன்பாடில்லாதிருந்த போதிலும் இத்தகைய உரிமையாவது தற்காலப் பெண்டிர்க்கிருக்கின்றதா? அவர் தம் உரிமையை நாளடைவில் பறித்துக்கொண்டே முற்காலத்திய பழைய சுவடிகளில் கூறியிருப்பவைகளைப் புகழ்ந்துகொண்டிருப்பதில் யாது பயன்? இன்று தங்களைச் சீவகாருண்ய சீலர்களென்று தொண்டை கிழியக் கத்திக்கொண்டிருக்கும் சைவர்களில்லங்களில் நடைபெறும் திருமணங்கள் எவ்விதமாய் நடைபெறுகின்றன? ஆண் மகன் தனக்கு விருப்பமான பெண் இதுவென்று கூறவும், அப்பெண் அழகுடையவளாய் இருக்கவேண்டும், நகைகள் இவ்வளவு இருக்கவேண்டும். கற்றவளாயிருக்கவேண்டும் என்றெல்லாம் கேட்க உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. பெண்மகளோ வாய் திறக்கக்கூடாது. நமக்கு வரப்போகும் புருஷன் இத்தகையவனாயிருக்கவேண்டுமென்று கூறவோ, தனக்கு விருப்பமான துணைவன் இவனென்று சொல்லவோ, தனக்கு கணவனாய் நிச்சயிக்கப்பட்ட புருஷனைப் பார்க்கவோ ஒரு பொழுதும் முடியாது. அவன் குரூபியானாலும், மூடனேயானாலும், குடிகாரனானாலும் பெற்றோர்களால் ஒருவன் நிச்சயிக்கப்பட்டால், பெண்களால் மறுத்துக் கூற பெற்றோர்கள் இடமளிப்பதில்லை. ஒரு சமயம் பெண் சிறிது தைரியங்கொண்டு "எனக்கு அப்புருஷன் பிடித்தமில்லை" என்று கூறிவிட்டாலோ, அம்மம்ம! அப்பெண் தாய் தகப்பனின் ஏச்சினாலும், உறவினர்களின் வசைச்சொல்லினாலும் படுந்துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல. பல பெண்மணிகள் இத்தகைய சந்தர்ப்பங்களில் தம் வீட்டைத் துறந்தோ, தற்கொலை புரிந்தோ கொள்ளுகின்றனர். இத்தகைய செயல் பல நம் நாட்டில் நடைபெறு



வதைக்கண்டும், கேட்டும் வருகின்றோம். இக்கொடுமைகளெல்லாம் நம் நாட்டு மக்களுக்கு சீவகாருண்யச் செயலாகத் தெரிவது நமது நாட்டின் துரதிர்ஷ்டம் என்றே சொல்லவேண்டும்.

## இளமை மணம்.

"இளமை மணம் கொடிது, கொடிது" என்று கூப்பாடு போடும் தொண்டர்கள் நம் நாட்டில் பலருண்டு. ஆனால், அவர்கள் தம் மத சாஸ்திரங்களுக்கும், தம் வீட்டிலுள்ள வைதிக கிழங்களுக்கும் பயந்து இக்கொடிய செய்கையை யொழிக்க முன் வராதிருக்கின்றனர். இவ்விளமை மணம் ஒழிந்து விட்டால் நம் நாட்டு விதவைப் பெண்களின் தொகையும் குறைந்து விடும். பொதுவாக நம் நாட்டில் இளமையில் இறந்து போவோர் தொகைதான் அதிகமாயிருக்கின்றது. ஆகையால் தான் இளமை மணம் குறைந்தால் விதவைகளாவோர் தொகையும் குறையுமென்று சொல்லுகின்றோம். இதையறிந்து தான் தோழர் ஹரிபிலதாஸ் சாரதா அவர்களால் 'சாரதா சட்டம்' என்னும் "இளமை மணத்தடுப்புச்சட்டம்" ஒன்றை நிறைவேற்றினர். அதை அமுலுக்குக்கொண்டுவராது செய்ய நம் வைதீகப்பேய்கள் செய்யும் சூழ்ச்சிகள் இன்னும் ஓய்ந்தபாடில்லை. இவ்வைதீகக் குடுக்கைகளுக்கு நம் நாட்டிலுள்ள பெண் மக்கள் முன் வந்து தக்க பாடம் கற்பியாமல் வாளாயிருப்பதினாலேயே இவர்களின் ஆர்ப்பாட்டம் ஒலித்துக் கொண்டிருக்கிறது. "இஸ்லாத்தில் பால்ய விவாகம் இல்லை" யென்பது தெளி

வாயிருக்கும், சில முஸ்லிம் தோழர்கள் இச்சாரதா சட்டத்தை ஒழிக்கத் துணைபுரிவதுதான் விந்தையிலும் விந்தையாயிருக்கிறது. இவ்விளமை மணத்தினால் எத்தனை உயிர்கள் துன்பமடைகின்றன. எத்தனை பெண்கள் மரணத்திற்கு ஆட்படுகின்றார்களென்று நாம் சிந்திப்பதே கிடையாது. பத்துவயதுப் பெண்ணை மணஞ்செய்த முப்பது வயது ஆடவன் எவ்வாறு அப்பெண்ணினிடம் நடந்து கொள்வான் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? எத்துணையோ இடங்களில் இப்பெண் குழந்தைகள் தம் வாலிப புருஷனின் மிருக இச்சைக்கு ஆட்பட்டு உடனே இறந்திருக்கின்றனர். பத்திரிகைகள் ஒழுங்காய் படிக்கும் நண்பர்களுக்கு இது புதிதல்ல. கல்கத்தாவில் இத்தகைய ஒரு சம்பவம் நடைபெற்றதை அறிந்து திரு காந்தியவர்கள் கூட இக்கொடுஞ்செயலைக் கண்டித்துள்ளார். ஆனால் இவ்விளமை மணம் என்னும் கொடுஞ் செயலைப் பற்றி யாம் கண்டிக்கும் பொழுது "மணம்புரியும் யுவர்களை மாத்திரமல்ல, அவனோர் பெற்றோர்களைத்தான் பெரிதும் கண்டிக்கின்றேன்." இதைப்பற்றிச் சொல்லும்பொழுது நம் ஜீவகாருண்யக் கோலம்பூண்டோர் "ஐயா! நீங்கள் சொல்லுவது முழுவதும் மெய்யே! ஆனால் இது எமது கொள்கையல்ல. பார்ப்பனர் கொள்கை, சைவத்தில் இளமை மணத்திற்கிடமில்லை. இன்னும் விரிவாய்ச் சொன்னால், தமிழர்களே இவ்விளமை மணம் செய்பவர்களல்ல" என்று சாதித்து விடுவர். ஆனால் நாங்கள் இச்சைவ சமய குரவர்களிலொருவரான திருநாவுக்கரசு நாயனாரின் சகோதரியும், நாயனாரை சமண சமயத்திலிருந்து சைவத்திற்கு மீட்ட பெருந்தகைப் பிராட்டியுமான திலகவதியார் இளமையில் விதவையாக்கப்பட்டு சிவாலயத்தில்



தேவ அடியாராக இருந்தார்களே யென்று கூறினால், "சுயமரியாதைக் காரர்களுக்கு ஆராய்ச்சியில்லை, படிப்பில்லை" என்று கூறுவார்கள் என்பதினாலே நான் அதைப் பற்றி இங்கு விரித்துக் கூறப்போவதில்லை. நம் இந்திய நாடு உஷ்ண பூமி, உஷ்ணத்தினாலும், ஏனைய சில காரணங்களினாலும் தற்சமயம் பெண்கள் 9-வயதிலிருந்தே பூப்பெய்துகின்றார்கள். பூப்பெய்தி ஒன்றிரண்டு ஆண்டுகளில் சாதாரணமாய் சைவர்கள் வீட்டிலெங்கும் திருமணம் செய்யப்பட்டு வருகின்றது. இது இளமை மணமாகாதா? என்று சைவ நண்பர்களை வினவுகின்றேன். பெண்களுக்கு இருபது வயது மட்டும் கல்வி கற்கும் வயது. அதற்குள் நடைபெறும் மணமெல்லாம் இளமை மணமே என்று பல பெண் அறிஞர்கள் சொல்லுவது கவனிக்கத்தக்கதேயாகும்.

## கற்பத் தடை.

10, 11-வயதிலே திருமணம் செய்யப்பட்ட பெண்; போதிய கல்வி கற்கச் சந்தர்ப்பம் பெறாத பெண்; உடலின் உள்ளுறுப்புக்களெல்லாம் முற்றாய் வளர்ந்து உடல் நலம் பெறாத பெண்; புருஷனின் கூட்டுறவால் இளமையில் ஒளி மழுங்கி, உடல் உரம் குன்றி, தம் இருபது வயதிற்குள் 5, 6-பிள்ளைகளுக்குத் தாயாகி, குடும்பக் கவலை, மக்களின் தொல்லை முதலிய பலவற்றாலும் கஷ்டப்படுவதோடு, எலிக்குஞ்சுகள் போன்று இளமையில் பெற்ற தம்மக்கள் அடிக்கடி நோயால் கஷ்டப்பட நேர்வதால், அப்பொழுதெல்லாம் தாம்பத்தியம் காத்துக் கஷ்டப்பட்டு, புல் தடுக்கினும் பொத்தென்று கீழே விழுந்து, இறந்து போகக்கூடிய பலயீன ஸ்திரிக்கு பெண்களையாளாக்குவது சிவகாருண்ய நெறியா? பிள்ளை பெறுவதை இயன்றமட்டும் தடுக்கச் சொல்

பவர் சீவகாருண்யமற்றவர்களா? வைதிகராகிய சாந்தி கலியாண சுந்தரனாரும் கூட "இயற்கை முறையில் பிள்ளைகள் அதிகம் பெறுவதைத் தடுத்தல்வேண்டும்" என்று கூறி வருகின்றார்கள். இயற்கைமுறையில் தடுப்பவர் தடுத்துக்கொள்ளட்டும், அவ்வாறு தடுக்கமுடியாதோர் செயற்கை முறையிலும் தடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறுபவர்கள் சீவகாருண்யமற்றவர்களா? அன்பர்களே! உண்மையில் ஒரு பிள்ளை பெறுவதில் பெண் மக்கள் எத்துணை கஷ்டப்படுகிறார்களென்பதை நன்கு அறிந்தால் நிச்சயமாகவே இப்பெண் மக்களை இக்கஷ்டத்திலிருந்து மீட்பதே சீவகாருண்யமென்று உணர்வீர்கள். பல நண்பர்களை யான் பார்த்திருக்கின்றேன்; தம் சோதரி, மனைவி பிரசவ வேதனையால் போடும் சத்தத்தைக் கேட்டு ஆறு போன்று கண்ணீர் சிந்துகின்றார்கள். பெண்டிர் பிள்ளைகள் சுருக்கமாகப் பெற்றால், பிள்ளைகளைச் செம்மையாய் வளர்க்கவும், அவர்களுக்குப் போதிய கல்வியளிக்கவும் கூடும். பிள்ளைகளை முற்றாய் பெறாதவர்களே உலகிற்கியன்ற தொண்டாற்றவும், தமக்குரிய உடல், பொருள், ஆவி மூன்றையும் எளிதில் தத்தம் செய்யவும் கூடும். "பிள்ளை பெறுவதைத் தடுத்து வாழும் முறையை" அறியாத நம் முன்னோர்களிற் பலர் இயற்கைக்கு முற்றும் முரணான பிரமச்சரிய வாழ்க்கையை மேற்கொண்டு கஷ்டப்பட்டு அலைந்தார்களென்பதை நாம் நன்கு அறியவேண்டும். இவைகளொன்றையும் கவனியாது தம் வாழ்க்கையில் நடந்துவருஞ் செயல்களே தம்முன்னோர் நடந்துவந்த நடத்தைகளே சீவகாருண்யச் செயலென மூடநம்பிக்கை கொண்டு இறுமாப்புடன் சீவகாருண்ய நெறியின் தன்மையை அறியாது பிதற்றுவோர் நமது நாட்டுச் சைவர்களே என்பது புலனாகும்.



## காதல்.

இதன் பொருள் அன்பு என்றாலும் பொதுவாக ஒரு ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் நட்புக் கொண்டிருப்பதையே காதல் என்று வழங்கப்படுகிறது. மனித வாழ்க்கையில் பசியும் காதலுமே முக்கிய அம்சங்களாய் விளங்குகின்றன. இக்காதலை வெறுக்கும் மனிதர்களே இவ்வுலகில் ஒருவருமிரார். கடலால் சூழப் பெற்ற இவ்வுலகமே காதலால் சூழப் பட்டிருக்கிறது. காதல் என்பது ஒன்றில்லையாயின் இவ்வுலகமே நடைபெறாது. ஆனால் மக்கள் யாவரும் காதலின் உண்மைத் தன்மையை உணர்ந்து நடப்பார்களாயின் நாட்டில் குலமேது? உயர்வு தாழ்வேது? பால்யமணமேது? முதலாளி, தொழிலாளி வேற்றுமை யேது? "பிராமணர் சூத்திரர்" பாகுபாடேது? சண்டை சச்சரவுகளேது? கொலைகளேது? எங்கும் சாந்தம், எங்கும் அமைதி, எங்கும் இன்பம், எங்கும் சமத்துவம். எனவே தான் நாட்டில் வேற்றுமை யுணர்ச்சி பெருகவும், சுய நலத்தோர் வயிற்றுப்பிழைப்பு நாடகம் நடைபெறவும் மதத்தின் பேரால் "காதலின்" வாயில் மண்ணை வாரிப்போட்டு அதை நம் தமிழ் நாட்டிலில்லாது விரட்டி விட்டார்கள்-இல்லை-கொன்று விட்டார்கள் என்றே கூறவேண்டியதிருக்கிறது. இக்காதலை மனிதர்கள் தங்கள் சமயத்தின் பேரால், கடவுள் பேரால் பழக்க வழக்கத்தின் பேரால் எத்துணை தூரம் ஒழித்துவிட முயற்சி செய்யினும் மக்களின் உள்ளத்தில் இயற்கையில் தோன்றிய இவ்வின்ப உணர்ச்சியை முற்றாய் ஒழித்து விட்டார்கள் என்று கூறமுடியாது.

அதை எவராலும் ஒழித்து விடவும் முடியாது. இதைப் பற்றி திரு. பென்லின்சே என்னும் அறிஞர் "காதலென்பது சரீரத்தோடு பிறந்ததோர் உண்மை உணர்ச்சி. நமக்குப்பசி எவ்விதம் உண்டாகிறதோ அதேபோன்று தான் காதலும் உண்டாகிறது. பசியை எவ்விதம் சட்ட சம்மதமானதென்றோ அன்றி சட்ட விரோதமானதென்றோ கூறமுடியாதோ அதே மாதிரியே காதலையும் கூறமுடியாது. காதலை ஒழுக்கமென்றோ அன்றி ஒழுக்கமற்றதென்றோ கூறவும் முடியாது. பசியை அதிகாரத்திற்கும் சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டதாக எவ்விதஞ் செய்ய முடியாதோ அதே போன்றே காதலையுஞ் செய்ய முடியாது. இச்சட்ட திட்டங்களுக் கெல்லாம் அது உட்பட்டதல்லவென்று நமது உள்ளுணர்ச்சியே தெளிவாக எடுத்துக்காட்டுகிறது" என்று கூறியுள்ளார். காதலின் பெருமையை வியந்து அறிஞர் ராஸ்க்கின் என்பவர் "ஒரு ஸ்திரீயினுடைய காதலினால் சுத்தப் படுத்தப்படாமலும் அவருடைய தைரியத்தினால் பலமளிக்கப் படாமலும் அவருடைய பகுத்தறிவினால் வழிகாட்டப்படாமலுமிருந்த மனிதன் எவனும் சரியான வாழ்க்கையில் வாழ்ந்ததில்லை" என்று கூறியுள்ளார். இன்னும், டெனிசன், செகப்பிரியர் போன்ற ஐரோப்பிய மேதாவிகள் பலரும் காதலை வியந்து கூறினர். பாடினர். தம் நாட்டில் காதல் செழித்தோங்க வழியுங் கோலினர். இது கண்ட சைவத் தலைவர்களென்போர் தமது சமயம் காதலைப் போற்றுகிறது என்று கூற நினைத்தனர். இன்றேல் உலகம் சைவத்தை, மக்களின் ஜீவாதாரமான உரிமையை மறுக்கும் ஒரு போலிச் சமயம் என்று கருதிவிடும் என்று எண்ணினர். தேவாரம், திருக்கோவையார் முத



லிய நூற்களில் தம் கொள்கைகளுக்கு ஆதரவு தேடி நுணுகி நுணுகி ஆராய்ந்து சில செய்யுட்களைக் கண்டு ஆனந்தித்து கருத்துக்களைப் புரட்டிக்கலின்பெற நூற்கள் எழுதினர். பத்திரிகைகளிலும், பிரசங்கங்களிலும் தம் புதிய கொள்கைகளை வற்புறுத்தினர். எடுத்துக் காட்டாக திரு. வேதாசலம் அவர்கள்.

"சாதி வேற்றுமை என்னும் கொடிய தூக்குக் கயிறானது காதலன்பின் கழுத்தை இறுக்கிவிட்டது. காதலன்பிற் சிறந்து மறுவற்ற மதிபோல் விளங்கத் தக்கவரான நம் பெண்மணிகளின் கற்பொழுக்கத்தை நிலைகுலைத்து அதனை பழிபாவங்களால் மூடிவிட்டது. எந்தப்பெண்மகளாவது தான் காதலித்த இளைஞனை மணம் கூட இடம் பெறுகின்றனளா? எள்ளளவுமில்லையே ஏன்? ஒரு சாதிக்குள்ளே இருபது வீடுகளேயுள்ளன, ஒரு இனத்திலே அவள் ஒருவனை மணக்கவேண்டும். அவள் கயல் மீனையொத்த கண்ணழகியாயிருந்தாலென்ன! கண் குருடானவனைத் தவிர வேறு மணமகன் தன் இனத்தில் கிடைத்திலனாயின் அவள் அவனையே தான் மணந்து தீரல்வேண்டும். அவள் முத்துக் கோத்தாலொத்த பல்லழகியாயிருந்தாலென்ன? தன் பாழும் இனத்தில் ஒரு பொக்கைவாய் கிழவனைத்தவிர வேறு மணமகன் கிடைத்திலனாயின் அவள் அவனையேதான் மணந்து தீரவேண்டும். அவள் பல கலை கற்று கல்வியறிவிலும், இசை பாடுவதிலும், நுண்ணறிவிலும் சிவநேய அடியார் நேயங்களிலும் சிறந்த கட்டழகியாயிருந்தாலென்ன? இறுமாப்பே குடிகொண்ட தன் சிறுமரக்குடியில் கல்வி யிருந்த மூலையே கண்டறியாதவனும் பாட்டுப்பாட வாயைத்திறந்தால் ஓட்டமாய் வர வன்

ஞனை வருவிப்பானும்—அறிவை ஓட்டிவிட்ட வெறும் மூளையுடையானும் குடித்து வெறுப்பானுமாகிய ஒருவனைத் தவிர வேறு மணமகன் கிடைத்திலனாயின் அவள் ஜாதியைவிட்டு வேறு ஜாதியிற் கலக்கலாகாமையின் அக் கல்லாக் கயவனையே கணவனாய்க் கொள்ளவேண்டும். ஆ! பொருளற்ற இச்சாதி வேற்றுமைக் கொடுமையால் நம் அருமைப் பெண்மணிகள் படுந்துயர் மலையினும் பெரிதோ, அன்றிக் கடலினும் பெரிதோ, அன்றி ஞாலத்தினும் பெரிதோ, இவ்வளவுதான் என்று கூறல் எம் ஒரு நாவால் இயலாது.

விலங்குகளும், பறவைகளும் கூடத்தாம் விரும்பிய துணையையே கூடி இனிது வாழாநிற்க ஆறறிவுடைய மக்கட் பிறவியிற் பிறந்து ஆறறிவையும், அழகையும், நற்குணத்தையும் கண்டு பாராட்டிக் காதலன்பு கொள்ளத் தக்க ஆண் பெண் மக்கள் மட்டும் இடையே புகுந்த ஜாதி வேற்றுமையென்னும் கொலைஞனால் வெட்டியழிக்கப்பட்டு காதலன்பு என்னும் உயிர் ஓடிப்போன பின் இழிந்த காமப்பிணை வாழ்க்கையில் காலங் கழிக்கும்படி சட்டாயப்படுத்தப்பட்டால் இதனினும் வேறு கொடுங்கொலை உளதோ! கூறுமின்கள் அறிஞர்களே! உலகியலொழுக்கத்திற்கு அடிப்படையாய் நிற்கும் காதலன்பைச் சிதறுத்துவிட்டால் அதன்மேல் நிற்கும் அவ்வுலகியல் வாழ்க்கை கீழ் விழுந்து நொறுங்காதொழியுமோ!" என்றும்,

"இளமைப் பருவத்தில் ஆண் பெண் என்னும் இருபாலார்க்கும் தோன்றுவதாகிய இன்ப உணர்ச்சியானது அழகு, அறிவு, நல்லியற்கையினால் உந்தப்பட்டு எழும்



அன்பின் வயமாகி ஒருவரையொருவர் இன்றியமையாராய் ஒருங்கு பொருந்தும் ஆண் பெண் மக்களுக்கு இவ்விழுமிய காதலின்பத்தை யூட்டி அவரது வாழ்க்கையைத் தூய்மை செய்து அதனைப்பெரிதும் பயன்படச் செய்வதாகும்" என்றும் கூறியுள்ளார் இதையாதரித்துத் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களும் திரு. கா. சுப்பிரமணியபிள்ளையவர்களும், வேறு பல சைவத்தலைவர்களும் திறம்பட மொழிந்துள்ளார்கள். இதனால் அறிவுடையார் எவரும், சைவம் காதல் மணத்தை ஆதரிக்கிறது என்று கூறத்துணியார். உண்மையில் சைவம் காதல் மணத்தை ஆதரிக்குமாயின் தற்காலச் சைவர்களிற் சிலராவது காதல் மணத்தை அனுஷ்டானத்தில் செய்து காட்டவேண்டும். 'நல்லமரம் நல்ல கனி கொடுக்கும், கெட்டமரம் கெட்டகனி கொடுக்கும்' என்னும் பழமொழிப்படி உண்மையில் சைவம் காதல் மணத்தை ஆதரிக்குமாயின் இன்று சைவர்களிடம் அக்காதல் மணம் அனுபவத்தில் காணலாம். இன்றைய சைவர்கள் கூட்டம் காதல் மணத்தை ஆதரிக்குமாயின் இன்று சைவர்களிடம் அக்காதல் மணம் அனுபவத்தில் காணலாம். இன்றைய சைவர்கள் காதல் மணத்தை ஆதரிக்காவிடினும் அதற்கு எதிரிடையாக இல்லாமல் இருந்தாலாவது சைவம் காதல் மணத்தைப் போற்றுகிறது என்று கூறலாம். ஆனால், சைவத் தலைவர்களே தம்மக்கள் ஒரு காதலனை விரும்பித்தேர்ந்து மணந்துகொள்ள இசைந்து நிற்கையில் அதைத்தடுத்து சுமார் 30 வயது வரையும் தம்மக்கள் தான் காதலித்த புருடனை மணக்க இடங்கொடாது அவர் தம் காதலனை நினைந்து நினைந்து நைந்து வருந்தும்படி செய்கின்றார்களென்றால் மற்றவர்களைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ?

இத்தகைய நன்பர்களைத்தான் நமது தேசிய கவி திரு. பாரதியார்,

'நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர் தாம் வியப்பெய்தி நன்றாமென்பர்;
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்;
பாடைகட்டி யதைக்கொல்ல வழிசெய்கின்றார்
பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க
மூடரெல்லாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி இடரெய்திக் கெடுகின்றாரே'

என்று கூறியிருக்கின்றார் போலும். இன்று உலகம் ஒரு மதத்தின் கொள்கையை அறிய அம்மத நூற்களில் கூறியிருப்பவைகள் என்னவென்பதை அறிய விரும்பவில்லை. மத நூற்களில் சொல்லப்பட்டிருப்பவைகளை புலவர்களின் திறமைக்குத்தக எப்படி வேண்டுமானாலும் பொருளைப் புரட்டிக்கூறலாம் என்பதை நன்கறிந்திருக்கிறது. எனவே ஒரு மதத்திலுள்ள மக்களின் செயலைக்கொண்டே அம்மதத்தின் தன்மையை முடிவுகட்டுகின்றது. ஆகையால் சைவம் காதல் மணத்தை ஆதரிக்கிறதா? இல்லையா? வென்பதை அறிய அம்மதத்திலுள்ள மக்களின் நடவடிக்கைகளைக்கண்ணுறுவது நியாயமன்றோ? எனவே சைவம் மக்களின்மேல் ஜீவகாருண்யம் காட்டுஞ் சமயம் என்பதை உலகிற்கு நிரூபிக்கச் சைவர்கள் விரும்பினால் வினை,

சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில் நாம் ஆடும்
மணற்சிற்றில் காலில் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி



நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா, இல்லிரே!
உண்ணுநீர்வேட்டேன் எனவந்தாற்கு அன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச்சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா வென்றாள், எனயானும்
தன்னையறியாது சென்றேன் மற்றென்னை
வளை முன்கைப்பற்றி நலியத், தெருமந்திட்டு
அன்னாய் இவனொருவன் செய்தது காண்
என்றேனா,
அன்னையலறிப் படர்தரத்தன்னையான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா, அன்னையும்
தன்னைப் புறம்பு அழித்து நீவ மற்றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான் போல் நோக்கி
நகைக்கூட்டம்
செயதான் அக்கள்வன் 'மகன்'

என்ற கலித்தொகை என்னும் அரிய பழந்தமிழ் நூலிலுள்ள செய்யுளைக் கூறி கையை நீட்டி நீட்டிப் பிரசங்கிப்பதையும் இன்னும் "இறையனார் அகப்பொருள்" போன்ற நூலின் உதாரணச் செய்யுட்களை இசையுடன் தலையையசைத்து அசைத்துப் பாடுவதையும் விடுத்து மகளிரின் உரிமையில் பிரதானமாய் விளங்கும் காதல் மணம் பெருகத்தக்கன புரிதல் வேண்டும். இன்றேல் அவ்வழியில் தொண்டாற்றும் சுயமரியாதைத் தொண்டர்களுடன் சேர்ந்துபணி புரிதல் வேண்டும். அஃதுமின்றேல் தம் சமயத்தில் சாதியில் காதல் மணம் புரியும் சுயமரியாதைத் தொண்டர்களுக்கு இடையூறு புரியாமலும் இழித்துரையாமலும் இருத்தல் வேண்டும். இஃதெல்லாமல் இன்னும் உள்ளொன்று வைத்துக்கொண்டு புறமொன்று

76992

பேசிக் காதல் மணத்தை வேருடன் கல்லிக்கொண்டிருந்தால் அன்னோர்களும் அவர் தம் சமயம், கடவுள், வேதம், புராணம் முதலியன யாவும் அதிசீக்கிரம் ஒழிக்கப்படும் என்பதையும், ஒழிக்கப்படவேண்டியது என்பதையும் அறிஞர் யாவரும் கூறுவர். அஃதுடன் காதல் மணத்திற்கு இடையூறு புரிபவர் எவரும் இவ்விருபதாம் நூற்றாண்டிலே தங்களை ஓர் ஜீவகாருண்ய மதஸ்தர்கள் என்று கூறல் முடியாதென்பதையும் உணரக்கடவர்.

“காதலினாற் மானுடர்க்குக் கவிதையுண்டாம்
கானமுண்டாம், சிற்பமுதல் கலைகளுண்டாம்
ஆதலினாற் காதல்செய்வீர் உலகத்தீரே,
அஃதன்றோ இவ்வுலகத்தலைமை இன்பம்,
காதலினாற் சாகாமல் இருத்தல் கூடும்,
கவலைபோம் அதனாலே மரணம் பொய்யாம”

என்று பாரதியார் பாடிய செய்யுளை சைவர்கள் மாத்திரமல்ல தங்களைக் காந்தியம் என்னும் ஜீவகாருண்ய மதத்தார் (அஹிம்சா வீரர்) என்று கூறும் தேசிய வீரர்களும் காதலைக் கண்டிக்கும் வைதிக பித்தம் பிடித்த திங்கள் வெளியீடுகளின் ஆசிரியர்களும் ஆராய்ந்து பார்க்கட்டும்.

## விவாஹ ரத்து.

---

ஒரு பெண் தன் கணவனன்றி வேறு ஆண் மகனுடன் சோரம் போனாலும், அவள் பிள்ளை பெறாத மலடியாய்ப் போய்விட்டாலும், குஷ்டம் போன்ற கொடிய



நோய் வாய்ப்பட்டாலும், அதிகமாய் பிள்ளைகள் பெற்று மெலிவுற்று அழகு குறைந்து ஆண்மகனின் இச்சையைப் பூர்த்தி செய்யத்தக்க சக்தியற்றிருந்தாலும், அல்லது தாம் விரும்பியவாறே அழகு, படிப்பு, நகை, முதலியன குறைவாக இருந்தாலும் அல்லது தமது கட்டளை தவறாக இருந்தாலும் மனைவி கீழ்ப்படிந்து நடக்காவிட்டால் அவளை விவாஹரத்து செய்துவிட்டு வேறொரு பெண்ணை மணந்துகொள்ளவும் முதல் மனைவி இருக்கும்போதே ஒன்றல்ல இரண்டல்ல தசரதன் போன்று அறுபதினாயிரம் பெண்களை மணந்துகொள்ளவும் அதுவும் போதாமல் லக்ஷக்கணக்கான பெண்களை வைப்பாட்டியாகவைத்துக்கொள்ளவும் நமது ஜீவகாருண்ய மதங்கள் அனுமதி கொடுக்கின்றன. ஆனால் ஒரு அழகிய நற்குணவதியான பெண் மகளுக்கு வாய்த்த கணவன் எத்துணை குரூபியாயிருப்பினும், பல் விழுந்த கிழவனாயினும், தொழு நோய் பற்றிய நோயாளியாயினும், ஆண் தன்மையிழந்த அலியாயினும் குணங்கெட்ட குடிகாரனேயாயினும், விபசாரமே தனது தொழிலாய்க் கொண்டலையும் வீணனேயாயினும் தம் மனைவியைக் கூட்டிக்கொடுத்துப் பொருள் சம்பாதிக்கும் தலைகமையனாயினும் எத்துணை தகாத செயலையுடையவனேயாயினும் அவனைவிட்டு விவாஹரத்துச் செய்து சுகமே தமக்கிசைந்த நல்ல துணைவனுடன் வாழ நமது ஜீவகாருண்ய மதம் இன்றைய நாள்வரை இடங்கொடுக்கவில்லை. கணவன் எத்தகைய துன்பத்திற்குட்படுத்தினும் அவனுடன் மனைவியிருந்து வாழ்ந்து தொலைக்க வேண்டியதாகவே இருக்கிறது. “தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை என்று கூறும் நமது மதம் “கற்பெனப்படுவதே

சொற்றிறம்பாமை'' என்று சொல்லும் நமது சமயம், தம் மனைவியை ஒரு சிவ பக்தர் விரும்பிக் கேட்க உடனே தம் இல்லாளை அச்சிவ பக்தனிடம் கூட்டிவிட்டு அப்பக்தனுக்குத் தம் சுற்றத்தாரால் இன்னல் விளையாது காத்துவந்த கொடுஞ்செயலைப் போற்றி அஃதே புண்ணியமான செயல்; மோக்ஷத்தை அளிக்கவல்ல அருஞ்செயல் அவரே எம் சமயத்தை உய்விக்கவந்த நாயன்மார் என்று கூறும் சமயம் எவ்வாறு மகளிர் உரிமைக்காக முன்வந்து ஆண் மக்களைப்போன்றும் பெண் மக்களுக்கும் விவாஹரத்து செய்துகொள்ளவோ அல்லது ஆடவனைப்போன்று ஒரு கணவனிருக்க மற்றொருவனை விவாஹஞ் செய்யவோ அனுமதி நல்கும்? துரோபதை ஐந்து கணவரை மணந்ததைப்போற்றி அவளைக் கற்புடையாள் என்று போற்றும்ஒரு மதம் தற்காலப்பெண்களுக்கு மாத்திரம் வேறு சட்டம் செய்வானேன்? என்பதை நமது மக்கள் யோசிப்பதில்லை.

ஆண்தான் விரும்பிய வாறெல்லாம் சட்டம் அமைத்துக்கொண்டு அநீதியான வழிகளிலெல்லாம் திரிந்துகொண்டு பெண் நியாயமான உரிமைகளையும் அனுபவிக்கவிடாது தடுக்கும் சட்டங்கள் அமைக்கப்பட்ட இந்துசமயத்தை ஓர் அறிஞர் ''பெண் கொலை மதம்'' என்று கூறியது மிகப் பொருத்தமானதே. கணவர்களால் அநீதியான முறையில் அடித்து விரட்டப்பட்ட பெண்களிற் பலர் விரும்பிய புருடர்களை மணந்து சுகமாய் வாழ வழியின்றி விபசாரஞ்செய்து தம் பசிப் பிணியைப்போக்கி வருகின்றனர் என்பதை நண்பர்கள் பலருமறிந்தே இருப்பீர்கள். புருடர்களால் விலக்கப்பட்டோ அல்லது புருடனை விலக்கிய பெண்களையோ வேறு புருடன் மணந்து



கொள்வது கூடாது; சட்டப்படி அவ்வாறு வேறு விவாகஞ் செய்துகொண்டால் அவர்களைத் தண்டிக்க அதிகாரமுள்ள நமது மதம் விபசாரஞ்செய்துகொள்ள சட்டப்படி அனுமதிக்கிறது. இதைவிட அம்மதத்திற்கு வேறென்ன கேவலம் வேண்டும். இவ்வாறு ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியும் வழங்கும் ஒருமதத்தை எங்ஙனம் ஜீவகாருண்ய மதம் என்று கூறுவது? என்றுதான் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே சட்டத்தையுண்டுபண்ணவேண்டியதென்று நம் மக்களின் மனப்பான்மை மாறுமோ அன்றுதான் நமது நாட்டின் அதிர்ஷ்ட காலாரம்பம். இத்தகைய மனப்பான்மையுடையார் பலர் பெருக இன்னும் பன்னாள் செல்லவேண்டும் என்றே கருதவேண்டியிருக்கிறது. பெண்ணே தெய்வம். பெண்ணைப்போற்றுக. பெண்ணை வணங்குக. என்று கூறிய சைவத்தோழர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களும் கூட தம் பெண்ணின் பெருமை என்னும் நூலில் ''பெண்மகவின் கவலையீனத்தாலோ வேறு எக்காரணத்தாலோ பொருந்தா நாயகன் வாய்க்கப்பெறுவானேல் என் செய்வது? பெண்மகள் அவனுடன் வாழ்வதா அல்லது வாழாது அவனை விடுத்துப் பிரிவதா? பிரிதல் வேண்டுமென்று சொல்ல இந்தியாவில் பிறந்த எனக்கு நாவெழவில்லை. எங்ஙனமாவது முயன்று அப்பொருந்தாத் தன்மையைப்போக்கவே பெண்கள் முயலல்வேண்டும். பெண்மை என்பது தன்மை என்பது. தொண்டு என்றும் மேலே சொல்லப்பட்டன. அத்தொண்டைப் பொருந்தா நாயகனை ஒழுங்கு படுத்துவதில் பெண்கள் நிகழ்த்தலாமன்றோ? தொண்டில் விருப்புடைய பெண்ணிற்கு அஃதொரு வாய்ப்புமாகும். தனக்கு வாய்த்த நாயகனைப்

பண்படுத்தப்புகுந் தொண்டினும் வேறு தொண்டு எற்றுக்கு? அத்தொண்டு வழியில் வாழ்வு செலுத்தும் பெண்மணி வாழ்க. அவள்பால் கடவுள் என்றும் நிலவுக" என்று கூறியுள்ளார். என்னே இவரின் புலமைத்திறம்! பசப்பு வார்த்தையின் பகட்டு! ஜீவகாருண்ய மதமென்று தற்பெருமை பேசும் சைவ சமயத்திலேயுள்ள தலைவர்களில் பெண் உரிமை விஷயத்தில் தாராள புத்தியையுடையவர் நமது தோழர் திரு. வி. க. அவர்களேயாகும். இவருடைய நிலையே இத்தகையதானால் மற்றையோரைப் பற்றி வினவவும் வேண்டுமா. பெண்ணிற்கு இஷ்டப்பட்ட கணவரைத் தெரிந்தெடுக்க உரிமையில்லை; கல்வி இல்லை; ஆண்மகன் எடுத்ததற்கெல்லாம் மனைவியை அடிக்கவும் அவளை நீக்கவும், வேறு மணம் செய்யவும் உரிமை சட்ட பூர்வமாய்ப் பெற்றுவருகிறான். சட்ட தைரியத்தாலே ஆண்கள் அநீதமான முறையில் நடந்து பெண்களை இம்சித்து வருகிறார்கள். அத்தகைய ஆண்மகனை எவ்வித வழியிலும் கட்டுப்படுத்தமுடியாத இச்சீவகாருண்ய சிலர் பொருந்தா நாயகனையிருப்பினும் அவனுடன் கட்டியழுது தொலைப்பதே புண்ணியமென்று கூற முற்பட்டுவிட்டார். அதுவே ஒரு இந்தியனின் மனப்பான்மை என்பதைக் கள்ளங்கபடின்றிக் கூறியும் விட்டார். இவைகளை எல்லாம் ஆராய்ந்தே நமது பெண்களிற் சிலர் நாம் ஆண் மக்களின் துணையின்றி நாமாகவே நம் உரிமைக்காகப் போராடி நமது உரிமைக்கு எதிராக இருப்பவைகளனைத்தையும் ஒழித்துவிடவேண்டுமென்று கூறுகின்றனர் போலும். ஆண் மக்களிற் பெரும்பாலார் சுயநல மனப்பான்மையை விட்டுவிட்டதாய்த் தெரியவில்லை. எனவே தோழர் இந்திராணி பாலசுப்பிர



மணியம் தோழர்கள் குஞ்சிதம், பி. ஏ., எல். டி., நீலாவதி, விசாலாட்சி, மரகதவல்லி முதலியோர்கள் முன் வந்து ஆண் மக்களின் மனப்பான்மையையும், ஜீவகாருண்ய மதமென்று பெண்களைக்கொலை புரியும் மதங்களின் நிட்டூரங்களையும் இன்று பிரசங்கங்கள் மூலமாயும் "குடி அரசு" போன்ற பத்திரிகைகள் மூலமாயும் உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்கி வருகின்றார்கள். இப்பொழுது எச்சமயம் ஜீவகாருண்ய மதம் எனச்சொல்ல முன் வருகிறது பார்ப்போம் என்று பெண்டிர் சேலஞ்ச் (பந்தயம்) பண்ணுகின்றார்கள். அவர்கள் முன் எச்சமயம் வந்து நிற்கும்.

## உடையும் முடியும்.

உடை விஷயத்தில் ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியும் இந்திய நாட்டின் பல விடங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது. மஹாராஷ்டிரம் முதலிய நாடுகளிலே பெண்டிர்கள் 24 முழச்சேலைகள் கட்டவேண்டும். அதிலும் கதர்ச்சேலை கட்டுவதென்றால் எத்துணை கஷ்டமென்பதை யூகித்துக்கொள்ளுங்கள். அந்தோ! கொடுமை! கொடுமை!! பெண்டிர்களை மனித உருவமென்றெண்ணாது ஒரு கழுதைப்பொதியை அவர்கள் எப்பொழுதும் சுமந்து திரியும்படி செய்வது அறமா? ஜீவகாருண்ய விஷயத்தில் உலகிலுள்ள எல்லா சமயத்திலும் சிறந்து விளங்குவது "சைவம்" என்று அச்சமயத்திலுள்ளோர் பலராலும் போற்றப்படும் ஒரு சமயத்தை ஆராய்ந்தால் அஃது எவ்விஷயத்திலாவது பெண்மணிகளிடம் ஜீவகாருண்யம் காட்டுகிறதில்லை யென்பது விளங்கும். சைவப்பெண்கள் எங்காவது 12 முழத்திற்குக் குறைந்த உடைகட்ட அனு

மதிப்பில்லை. பெரும்பாலோர் 16 முழச்சேலைதான் கட்டி வருகின்றார்கள். உஷ்ணப் பிரதேசங்களில்வாழும் ஆண்கள் உடம்பில் ஒன்றும் அணியாது இடுப்பில் 4 முழவேஷ்டியும் மேலே 3 முழத்துண்டும் போட்டுக்கொள்வதே கிரமமாயிருக்கிறது. பலவிடங்களில் நமது அன்பர் திரு. காந்தியவர்களைப்போல் அரையில் ஒரு சிறுதுண்டு மாத்திரம் அணிந்து கொண்டிருக்கும் மனிதருமுளர். அதிகமாக உஷ்ணத்தினால் புழுக்க மேற்பட்டால் எந்தப்பெண்கள் முன்னிலையிலும் ஆண்மகன் அரையில் ஆடையின்றி ஒரு சிறு கௌபீனம் மாத்திரம் கட்டிக்கொண்டு விசிறியினால் வீசிக்கொண்டிருக்க நாம் அடிக்கடி பார்க்கின்றோம். பெண்மக்களோ 16—20 முழச்சேலைகளையும் ஒன்றுக்கு மேல் ஒன்றாக இரண்டு மூன்று சட்டையும் அணிவதுடன் அவர்களின் ஆடை பாதத்தெரியாது கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது ஆண்மக்களின் விருப்பம் மதத்தின் நோக்கம். அஃதன்றி பெண்டிர்கள் கொஞ்சம் கெண்டைக்கால் தெரியும்படியோ சிறிது மெல்லிய ஆடையோ அணிந்து விட்டால் வந்தது அவர்களின் கற்புக்கு ஆபத்து என்று கூப்பாடு போட்டு விடுகிறார்கள். இவ்வாறு விரும்பும் ஆண்மகன் கட்டியிருப்பதோ 4 முழ முள்ள கிளாஸ்கோமல். காற்றடித்தாலோ கேட்கவேண்டியதில்லை. இப்புண்ணியவான்களிற் பலரை யான் திருச்செந்தூர் முதலிய புண்ணிய ஸ்தலங்களில் பன்முறையுங் கண்டிருக்கின்றேன். தம் மெல்லிய வஸ்திரத்தோடு குளித்துவிட்டு அந்த ஈர வேஷ்டியுடன் ஆண்பெண் முதலியோர் கூட்டங்களுக்குள் வந்து நிற்கின்றார்கள். என்னே ஆபாசம்! இவர்கள் ஏன் இந்த அரைவேஷ்டியும் அணிந்திருக்கிறார்கள் என்பதே என் மனத்தில் ஊசலா



டிக்கொண்டிருக்கும் வினாவாகும். இத்தகைய அயோக்கியர்களும் பெண்டிர்களின் ஆடையின் நீளத்தைக் குறைக்கவேண்டுமென்றால் சம்மதிக்க வழியில்லை. (பெண்கள் ஆடை முடாயிருக்க வேண்டுமென்பது எனது நோக்கமன்று.) ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி, இவ்வுடை விஷயத்திலுமா இருக்கவேண்டும்? பெண்கள் சில மிருக சுபாவமுள்ள ஆண்மக்களிடம் தனியான இடத்தில் அகப்பட்டுக்கொண்டால் அந்த ஆண் கொடியர்களிடம் இருந்து தப்பித்துக்கொண்டு ஓடிவிடுவதற்குத் தடையாக இருப்பது 3, 4 சுற்றுப்போட்டுக் கட்டிய அன்னார் சேலைகள் தாம் என்று சொல்லுவது மிகையாகா. எனவேதான் சுயமரியாதை இயக்கத்தலைவர்கள் பெண் மக்கள் பால் ஜீவகாருண்யம் கொண்டு அவர்களின் உடையில் சில மாற்றங்கள் செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதாவது அரையில் 4-அல்லது 4½ முழ முரட்டுத்துண்டு கட்டிக்கொள்வது பெண்களுக்கு மிக நல்லது. அது முகமதிய சகோதரர்களின் சராய்களைப் போன்று இரு பக்கங்களும் மூடப்பட்டிருத்தல் வேண்டும். மேலே ஒரு சட்டையும் சுமார் 4 முழத்தில் ஒரு தாவணியுமிருத்தல் வேண்டும். இதுவே பெண்களுக்கு ஏற்ற உடை; இந்திய நாட்டிற்கேற்ற தேசிய உடை. பெண்களின் சுகாதாரத்திற்கும் ஆபத்தின் பொழுது திடீரென ஓடவும் கஷ்டமின்றித் துவைக்கவும் ஏற்றதாகும். அசாம், திருவாங்கூர் இராஜ்யத்தில்மட்டுமல்ல, மலாய் நாட்டிலும் இந்த உடை பணக்காரர் முதல் ஏழைகள் வரை உடுத்தப்பட்டு வருகிறது. மேலும் இவ்வுடை வெள்ளை உடையாக இருப்பது நலம். பொதுவாக உடை

அதிக மினுக்காகவும் மனதை மயக்கத் தக்கதாகவும் இருக்கக்கூடாது. பெண்டிர்களின் இயற்கையழகை அதிகமாய் செயற்கையழகால் பெருக்கிக் காட்டுவதினால் உடல்வலி அதிகம் பெற்று மனவலி குறைந்த சில ஆண் பேய்கள் மயங்குற்று சிற்சில விடங்களில் பெண் மக்கள் துன்பத்திற்காளாக்கப்படுகின்றார்கள். இஸ்லாத்திலும் கூட மினுக்கான அதாவது ஆடவர்கள் மனதைக்கொள்ளைகொள்ளும்படியாக பகட்டுடைகள் அணிவது மறுக்கப்படுகிறது. மேலும் வெள்ளையுடை அசுத்தத்தை உடனே நன்கு எடுத்துக் காட்டுவதுடன் பெண்களின் சுகாதாரத்திற்கும் ஏனைய நலத்திற்கும் ஏற்றதாயிருக்கிறது. இது பெரும்பாலும் ஐரோப்பிய பெண்மணிகளால் தேசத்திற்கேற்ப சில மாறுதல்களுடன் அனுஷ்டிக்கப்படினும் அன்னோர்களின் மாலையுடை வெள்ளையேயாகும். கிறிஸ்துவ சகோதரிகள் கூட சிற்சில விடங்களில் இதை அனுஷ்டித்து வருகிறார்கள். அவர்களின் மதம் பழக்க வழக்கம் இதற்கு எட்டுணையும் மாறுபட்டிருக்கவில்லை. நம் நாட்டிலுள்ள ஜீவகாருண்ய மதமோ பெண் வெள்ளையுடை அணிவதைக் கண்டிக்கிறது. விதவைகள் மாத்திரம்தான் வெள்ளையுடை அணியலாம் என அறைகிறது. தமிழிலுள்ள பழைய நூற்களை நுணுகி ஆராய்ந்த அறிஞர்கள் பண்டைக் காலத்து தமிழ் நாட்டிலுள்ள பெண்கள் விவாகமாவதற்கு முன்னரும் கூட வெள்ளையுடை அணிந்திருந்தார்கள், என்று கூறினாலும் சீவகாருண்ய அன்பர்கள் அதைப்பற்றி அறியார்கள். சுயமரியாதைத் தலைவர் கூறியபடி சுருங்கிய ஆடைகள் பெண்கள் அணிவதற்கு அவர்களின் பழக்க வழக்கம் இடங்கொடுக்கவில்லை. ஆண் மகன் தன்னுடைய காலத்திற்குக் காலம் மாற்றிவருகின்றான்.



வேஷ்டி கட்டியவன் ஐரோப்பியன் போல் காற்சட்டையும் பூட்சும், தொப்பியும் அணிந்துகொள்ளுகின்றான். பெண்மணிக்கோ ஒன்றும் மாற்றம் செய்ய உரிமையில்லை. வெய்யிற் காலத்தில் செருப்புப்போட்டு நடக்கவும், குடைபிடித்து நடக்கவும் வழியில்லை. அந்தோ! கொடுமை!! கொடுமை!!! இத்தகைய கொடியோர்களுக்கு சீவகாருண்யமும் ஒரு கேடா? தங்களை கடவுள் நம்பிக்கையுடையவர்களென்று சொல்ல வெட்கப்படவேண்டாமா? பெண்மக்களை இத்தகைய கொடுமைக்காட்படுத்துபவர்களுக்கு எக்கடவுள்தான் ஆதரவு காட்டும். ஒரு பொருளிருந்தால் அதைக்கடவுளென உலகத்திலுள்ள அறிவுடைய அன்பர்கள் ஒப்புக்கொள்வார்களா? இத்தகைய கொடுமைகளை ஒழித்து பெண்டிர்களுக்கு நன்மை செய்பவர் எவராயிருப்பினும் அவரே சீவகாருண்ய சீலர் என்பது எனது அபிப்பிராயம்.

ஆண் பெண் இருபேர்களுக்கும் இயற்கையாகவே மண்டையில் மூடி முளைக்கின்றது. இயற்கையுடன் வாழ்ந்த ஆண்-பெண்ணாகிய பண்டைய தமிழ் மக்கள் தலைமயிரை நீளமாய் வளர்த்து வந்தனர். பின்னர் பல அசௌகரியத்தின் காரணமாக ஆண்கள் அன்பர் காந்தியைப் போல் உச்சியில் சிறிது முடியை வைத்துக்கொண்டு மற்றவைகளைச் சிரைத்து வந்தனர். பின்னர் ஐரோப்பிய நாகரீகங்கண்டு மிக வசதியாய் கிராப் செய்து கொண்டனர். பெண்மக்கள் கதியோ அதோ கதிதான். அவன் தன் வசதிக்கேற்றவாறு மயிரில் கூட சீர்திருத்தம் செய்ய வழியில்லை. பெண் நீண்டகேசத்தினால் படுந்துன்பம் அதிகம். ஒருபகலில் அதிகமான நேரம் அவர்கள் தலைமயிரைக் கவனிப்பதிலேதான் செலவிடப்படுகிறது. சிலவீடுக

வில் பெண்டிர்கள் காலையிலெழுந்து ஸ்நானஞ்செய்துவிட்டால் சுமார் 9 மணிவரை தம் வீட்டிற்குள்ளிருந்து தலைமயிரை உலர்த்துகின்றார்கள். பின்னர் எண்ணெய் தேய்த்து சடைபின்னிக்கொள்வதற்குள் மணி 11 ஆகிவிடுகிறது. பின்னர் காற்றினால் சீவியதலை உலைந்து விட்டால் மாலையிலும் சில மணிநேரம் சீவுவதில் செலவிடுகின்றார்கள். பெண்களின் நிலையை என்னென மொழிவது! சிற்சில சமயங்கள் மாலைவேளைகளிலோ இரவிலோ ஸ்நானஞ் செய்யும்படி நேரிட்டால் தலை உலராமல் பெண்கள் படும் கஷ்டங்களும் அதனால் மண்டையிடி முதலிய வியாதிகளுக்கு ஆட்படுவதும், ஒன்றிரண்டு நாள் தலையைக் கவனியாதிருந்து விட்டாலோ பேன்கள் பற்றுவதும் பின் சீவி ஒரு தடவைக்கு நூற்றுக் கணக்கான உயிர்களைக் கொல்வதும், பேன் அதிகமாய்ப்பெருகி மண்டையில் பொடிப்பு, சிரங்குகள் உண்டாவதுடன் ஒரு விதக்காய்ச்சலை உண்டாக்கி அவதிப்படச்செய்வதும் தான் சைவர்கள் கண்ட ஜீவகாருண்ய உண்மைபோலும், சில பெண்களுக்கு 4, 5 அடிநீளம் தலைமயிரிருக்கிறது. அவர்கள் எப்படித்தான் ஜீவிக்கிறார்களென்பது எனக்குத்தெரியவில்லை. இவ்வாறு நீளமான கூந்தலினால் பெண்களுக்கு என்ன நலம். மனுஷத் தன்மையையறியாத புருடர்கள் வாய்த்தால் இந்நீண்ட கூந்தலை நன்றாய் பிடித்துக்கொண்டு முதுகில் படீர் படீர் என அடிக்கத்தான் வசதியேயொழிய வேறு நலம் பெண்களுக்கிருப்பதாகத் தெரியவில்லை. நம் நாட்டிலுள்ள ஆடவர்கள் பலர் நமது பெண்கள் ஐரோப்பிய பெண்களைப் போன்று முடியை வெட்டிக்கொண்டால் அவர்களின் அழகே போய்விடுமென்று வாதிக்கின்றார்கள். என்னே இவர்களின் மனப்



பான்மை! பெண்கள் ஆண்களால் அழகு பார்க்கவும், தங்களின் காம இச்சையை பூர்த்தி செய்விக்கவும், தோன்றிய அசேதனப் பொருள்களா? பெண் மக்களெல்லாம் ஆண்மக்கள் தலையை கிராப் செய்துகொள்ளுவது அழகாகயில்லை தலைமயிரை நீளமாய் வளர்த்துப் பின்னி ஜடைபோட்டுக் கொள்ளவேண்டும் என்று எழுதினால், கூறினால் எத்தனை ஆண்கள் அதை ஒப்புக்கொண்டு நடப்பார்கள்? பெண்மக்கள் அவ்வாறு கேட்க உரிமையில்லையா? இந்திய நாட்டிலுள்ள சில தமிழ்ப் பண்டிதர்கள் இச்சமயம் இயற்கையைக் கொண்டுவந்து புகுத்தி மக்களை ஏமாற்றப் பார்க்கின்றனர். இவ்வியற்கைச் சட்டம் பெண் மக்களுக்கு மட்டுமா? ஆண் மக்களுக்கில்லையாவென அப்புலவர்களைப் பன்முறையும் வினவுகின்றேன். ஐரோப்பிய பெண்கள் தலைமுடியைத் தங்கள் வசதிக்கேற்ப வெட்டியிருக்கின்றார்கள். அவர்களுக்கென்ன அழகில்லையா? அழகில்லையென்று அவர்கள் கணவர்கள் அவர்களை விரும்புவதில்லையா? அவர்கள் பிள்ளைகள் பெறுவதில்லையா? அதனால் அவர்களுக்கு நேர்ந்துள்ள கெடுதல்கள் இன்னதென்று நம் தமிழ் நாட்டுப் பழமை விரும்பிகள் விளக்குவார்களாவென்று கேட்கின்றேன். இப்பழமை விரும்பிகளால் பெண் உலகு பாழ்பட்டு வருகின்றது நமது நாட்டில் ஆண்களின் ஜனத்தொகையை விட பெண்களின் ஜனத்தொகை நசித்து வருகிறதென்பதை எந்த இந்திய தேசாபிமானியாவது அல்லது எந்த ஜீவகாருண்ய மதஸ்தனாவது உணர்ந்து அதற்காவன புரிய முன் வந்தானா? இல்லை! இல்லை!! எல்லாம் சுயநலம்! சுயநலம்!! இக்கிளர்ச்சியிலும் ஏதாவது தன்னலமிருக்கக் கண்டால் எத்தனையோ தேசிய வீரர்கள் வெரு

கம்பீரமாய் வீர கர்ஜனையுடன் பிரசாரமும், பத்திரிகைக் கிளர்ச்சியும் செய்துவிடுவர். பாவம்! பெண்களுக்குப் பரிந்து பேசுவதனால் யாதொரு பிரயோஜனமுமில்லை என்று திட்டமாயறிந்தே தேசாபிமானிகள் பெண் நலன் பேணல் என்னும் நல்லறத்தைப் புறக்கணித்து விட்டு பெண் நலத்திற்கு இடையூறியற்றும் பேயர்களை யெல்லாம் தேசாபிமானிப் பட்டமீந்து அவர்களுக்கு மேதை மரியாதையும், பத்திரிகையில் அவர்களைப்பற்றி பெரிய விளம்பரங்களும் மிகத் தடபுடலாய் செய்யப் படுகிறது. பெண்நலம் பேண முன் வருபவர்கள் நிந்திக் கப்படுகிறார்கள். பத்திரிகைகள் அவர்களின் செல்வாக் கைக் குறைக்க வழிதேடுகின்றன. இவைகளெல்லாம் ஜீவகாருண்யமென எவரோ வாதிக்கவல்லர்? என அறிவு டைய மக்களை வினவுகின்றேன்.

## நகைகள்.

தமிழ் நாட்டிலே இதுகாலை யாண்டும் நகையைப்பற் றிய பேச்சாகவே இருக்கிறது. எத்தகைய திருமணப் பேச்சிலும் முதலாவதாகக் கேட்கப்படுகிறது நகை எவ் வளவு என்பதே. பெண் நகைக்காக விரும்பப்படுகின்றாளே யொழிய அவள் குணம், நடை, அறிவு, அழகு முதலிய வற்றிற்கு மணம் நடைபெறுவது தமிழ் நாட்டிலில்லை. ஒவ்வொரு ஆண் மகனும் தன் மனைவியுடைய நகையின் பெறுமானம் இவ்வளவென்றும், அதன் வேலைப்பாட்டின் தன்மையையும் சொல்லப் பெருமைப் படுகின்றான். எவ் வளவு எளியவனாயினும் கடன் கொண்டாவது தன் மனை விக்குக் கொஞ்சம் நகை போட்டுப்பார்க்க ஆசைப்படுகி



றான். ஆண் மகனோ காலத்தை அனுசரித்து காதில் போடும் கடுக்கன், முருகு, பசலைக்கல் முதலியவைகளை அநாகரீகச்செயலென்று நிறுத்திக்கொண்டான். பெண் மக்களையோ அலங்கரித்துப் பார்த்து மகிழத்தக்க பொம் மையாய் பாவித்து உச்சியிலிருந்து உள்ளங் கால் வரை நகைகளைப் பூட்டிவிடுகிறான். பணக்காரர் வீடுகளிலோ ஒரு ஆள் சுமக்கும் கூடுதலான பார முள்ள நகைகளால் பெண்கள் சுமக்கமுடியாது கஷ்டப் படுத்தப்படுகிறார்கள். இச்செயல்கள் பட்டணங்களில் கொஞ்சம் குறைவுற்றிருப்பினும் கிராமங்களில் லேசாய் ஒழிவதாய்க்காணோம். சிலவிடங்களில் பெண்கள் இந்த நகைகளால் தினந்தோறும் செத்துச் செத்துப் பிழைக் கின்றார்களென்று தான் கூறவேண்டியதிருக்கிறது. ஊரில் கள்ளர்கள் என்றால் வீட்டில் பெண்களுக்குத் தூக்கம் கிடையா. காட்டுவழிபோனால் பெண்களுக்கு கள்ளன் கள்ளன் என்றே நெஞ்சுதுடிக்கிறது. தென்னிந்தியப் பெண்களுக்குப் பிடித்த இந்த நகைப்பேயால் தான் நாட் டுப்புறங்களில் சுகாதாரத்திற்கேற்ற விதமாய் வீடுகட்டி வாழக்கூட வசதியில்லாதிருக்கிறது. நகையணிவது மட்டுமல்ல தங்கத்தினால் தாலி கட்டுவதுங்கூட தமிழர் களின் நாகரீகமன்று என அறிஞர்கள் செப்புகின்றார்கள். மாலையிடலே தான் பண்டைகாலத்தின் மணவினைக்குரிய தாய் விளங்கினது. அவ்வாறிருக்க தமிழர்களை இந்த நாகரீகப்பேய் விட்டபாட்டைக்காணோம். இந்த நகை யினால் தான் பெண்கள் கள்ளர்களால் பலவிடங்களில் துன்பத்திற்காளாவதும் தவிர கோழைத்தனமும், பய மும் குடிகொண்ட உள்ளமுடையோராய் ஆகிவிடுகின்ற னர். இதைப்பற்றிக்கூட யான் அதிகமாய்க் கவலைப்பட

வில்லை. வேண்டுமானால் பெண்களுக்கு ஆபத்துக்காலத்தில் இக்கைகளை விற்றுப்பிழைத்துக்கொள்ளக்கூட வழியிருக்கிறது என்று மனதைச் சமாதானம் செய்துகொள்வேன். ஒரு சிறிய முள் தங்கள் மக்கள் காலில் தைப்பினும் பொறுக்க முடியா மனதையுடைய மாதா பிதாக்களும் இயற்கையில் மக்களுக்கு ஏற்பட்ட நவத்துவாரங்களோடு கூரிய ஊசியால் இரத்தம் சிந்த உடலில் பல துவாரங்கள் போடும்படி சொல்வதும் அதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருப்பதும் நீதியா? சீவகாருண்யச் செயலா? என்பதுதான் என்மனதில் உள்ள ஒரு பெரும் பிரச்சினை. இதற்கும் சைவர்களின் சீவகாருண்ய மதம் இடங்கொடுக்கிறதா? ஆடுமாடுகளை அடிக்கவும், பறவைகளைத் தலைகீழாய்த் தூக்கவும் பொறாத சீவகாருண்ய சங்கம் இதைப்பற்றி ஆராயாதது வியப்பாக இருக்கிறது. பெண்கள் நிலை இந்தப் பறவைகளைவிட கேவலமாய் இவர்களுக்குத் தோன்றிற்றுபோலும்.

## விதவை மணம்.

துணைவனை இழந்த பெண்ணை நமது புண்ணிய நாட்டிலே விதவையர், கைம்மையர், அறுதலி, முண்டச்சி, நூலிழந்தோர், அமங்கலி முதலிய பல பெயர்களால் அழைக்கப்பட்டு வருகிறது. ஆண்மகன் தன் துணைவியை இழந்தால் அவனை இத்தகைய பெயர்களால் அழைக்கப்படவேண்டியது நியாயமாயிருக்க, அவனை எவரும் அவ்வாறு அழைப்பதில்லை. துணைவி இறந்த ஆண்மகனை எவ்விதத்திலும் மதச்சட்டதிட்டங்கள் பாதிப்ப



தில்லை. ஏனெனில் மதச்சட்டதிட்டங்களெல்லாம் பெரும்பாலும் ஆண்மக்களே வகுத்திருப்பதினால் தங்களுக்கு இடைஞ்சலில்லாவழியில் மதக்கொள்கைகளை அமைத்துக்கொண்டு பெண்ணுலகிற்குப் பெரிதும் கேடுவிளைவித்திருக்கிறார்கள். ஜீவகாருண்யமில்லாக் கொடிய ஆண்பேய்கள் மதத்தின் பேரால், கடவுளின் பேரால், மகாத்மாக்களின் பேரால், கற்பின் பேரால், துணைவனை இழந்த பெண்ணை அவனுடன் உயிருடன் வைத்துச்சுட்டெரித்துவிடவேண்டுமென்று சட்டஞ்செய்து கோடிக்கணக்கான நம் இந்தியச்சகோதரிகளை அவ்வாறே இரக்கமில்லாமல் சுட்டெரித்து வந்தார்கள். இதைத்தான் உடன்கட்டை ஏறல் அல்லது சதியென்று கூறுவது. பண்டைக்காலத்திலே தசரதன் போன்று பல ஆயிரக்கணக்கான மனைவிகளை மணந்துவாழும் வழக்கமிருந்ததால் ஒரு ஆண் மகன் இறந்து போனால் அவனுடைய துணைவிமார்களாகிய ஆயிரக்கணக்கான பெண்மணிகள் சுட்டெரிக்கப்பட்டு வந்தனர். இவ்வாறு உடன் கட்டை ஏறினால் அப்பெண்களுக்குச் சொர்க்கம் கிடைக்குமென்று சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் அச்சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் மோட்சத்தை நம்பி எப்பெண்மணியும் தானே மனமுவந்து உயிர்துறக்க இணங்கார். பலவந்தமாக அக்காலத்துப் பெரியார்கள் ஒரு ஆணுக்காக ஆயிரக்கணக்கான பெண்களை அவர்கள் மனந்துடிக்கச் சுட்டெரித்திருக்கிறார்கள். அந்தோ. கொடுமை! கொடுமை! அக்கொடுஞ்செயலெல்லாம் ஜீவகாருண்யம் என்றுதான் அக்காலத்து வைதீக மக்கள் எண்ணினர் போலும். இப்பாதகச் செயலைக்கண்டு மனமிரங்கி இந்திய நாட்டுச் சீர்திருத்தவாதிகள் பெருங்கிளர்ச்சி புரிய

அரசாங்கமும் சிறிது கருணைகொண்டு இப்பாதகச்செயலைச் சட்டபூர்வமாகத் தடுத்துவிட்டார்கள்.

அதன்பின்னர் துணைவனை இழந்த பெண்களை மொட்டையடித்து மூலையிலுட்காரச் செய்து ஒரு நேரத்திய உணவுமட்டுமுண்டு வாழவேண்டுமென்றும், நகைகளும், நல்ல ஆடைகளும் அணியக்கூடாதென்றும், அவர்கள் ஒரு நல்ல காரியங்கள் செய்யப்போகும்போது எதிரில் வரக்கூடாதென்றும் இன்னும் பல கொடுஞ்சட்டங்களும் செய்து துன்புறுத்துவதோடு ஆண்மகனைப்போல் பெண் மறுமணம் செய்யக்கூடாதென்றும் நம் நாட்டில் தோன்றிய சிவசாருண்ய மதம் கட்டளையிடுகிறது. விதவைப் பெண்களை வீட்டில் உற்றார் உறவினர் முதலிய பலரும் காய்கின்றார்கள். தாய்தந்தையர் வெறுக்கின்றார்கள். அண்ணன் தம்பிமார்கள் அவமதித்துப் பேசுகிறார்கள். சுமங்கிலியான அக்காள் தங்கைமார்கள் அடிக்கடி குறை கூறுகின்றார்கள். எத்தனையோ சோதரிகள் இக்காய்வும் வெறுப்பும் அவமதிப்பும் தாங்கப்பெறாது தற்கொலை செய்து கொள்ளுகின்றார்கள். பலர் பட்டணங்களிற் போய் சுயேச்சையுடன் வியபிசாரத்தனம் செய்து பிழைக்கின்றார்கள். பலர் மலேயா இலங்கை முதலிய இடங்களுக்குப் போய் தோட்டக்காட்டில் நாணமிழந்து கூலி வேலை செய்து பிழைக்கின்றனர். பலர் கால் வயிறுண்டு சாவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். சிவசாருண்ய மதத்தலைவர்கள் என்போர் இதைப்பற்றி ஒரு சிறிதும் கவனிக்கின்றார்களில்லை. ஒருசில முற்போக்குள்ள தலைவர்கள் விதவை மணத்திற்கு ஆதரவு காட்டிப் பேசினாலும் நீண்டநாள் வழக்கம் ஒழுக்கம் என்னும் பேய்களும், சாஸ்திரம், கடவுள், ஜாதிக் கட்டுப்பாடு முதலிய



பூதங்களும் அவர்களுடைய கையிலும், காலிலும் விலங்கை மாட்டிவிடுகின்றன. அரசாங்கம் மறுமணத்திற்கு ஆதரவு காட்டினும், நடைமுறையிலும் போதிய பலன் கிடைக்கவில்லை. எனவே தான் பெண் மக்களின் மறுமணத்திற்கு எதிரிடையாக இருக்கும் கடவுள் வேதம், சமயம், புராணம், பழக்கம், ஒழுக்கம் முதலிய அனைத்தையும் ஒழித்தால் விதைவைப் பெண்கள் விமோசனம் அடைவர் என்ற பெருநோக்கோடு தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சுயமரியாதை இயக்கங் கண்டார். சுயமரியாதை இயக்கம் வெற்றி பெறாவிடில் நாட்டில் பெண்களைப் பிடித்துள்ள விதவையெனும் பெரும் நோய் நீங்காதென்பதோடு பெண்ணுலகிற்கே விமோசனம் உண்மையில் இல்லையென்றே கூறலாம்.

விதவையான பெண்டிர் படுந்துயரை நினைக்கும் பொழுது பண்டைக்கால வைதிகர்கள் செய்த "சதி" என்னும் உடன்கட்டை ஏறச்செய்த கொடுஞ் செயல் எவ்வாற்றானும் உயர்ந்த நற்செயலென்னும் முடிவிற்கே வரவேண்டியதிருக்கின்றது. உடன்கட்டை ஏறல் ஒரு நாள் துன்பம். விதவையானால் ஆயுட்காலமுழுதுந் துன்பம். இத்துன்பத்தினின்று பெண்மக்கள் விடுபட சமூக சீர்திருத்தவிருப்பங் கொண்ட அறிஞர்கள் ஊக்கங் குன்றாது உழைத்தும், லாகூர் ஸர் கங்காராம் போன்ற தனவந்தர்கள் இலட்சக்கணக்கான பொருள்களைக்கொடுத்தும் விதவைகள் துன்பம் நீங்கியபாடில்லை. காரணம் ஜாதிகள், கடவுள், சாஸ்திரம், பழக்க வழக்க முதலியவற்றிற் கொண்ட மோகமேயாகும். இந்த மோகம் ஒழியும் வரை விதவை சோதரிகள் மீட்சியடையும் வரை இந்து மதத்துக்கும், இந்தியாவுக்கும் மீட்சியில்லை. இது

பற்றியே தமிழ் நாட்டின் தேசியத்தலைவர் ஒருவர், "நமது நாட்டில் இலட்சக்கணக்கான சிறு குழந்தைகள் கைம்பெண்களாயிருக்கிறார்கள். இவர்கள் கதி என்னை? திருமணம் இன்னதென்றுணரா முன்னர் ஏன் சிறுமியர்களைத் திருமணஞ் செய்து கொடுத்தல் வேண்டும்? கைம்மையடைய நேர்ந்தால் அவர்களை ஏன் கூட்டிலடைத்து வருத்தல்வேண்டும்? அவர்கள் வழுக்கி வீழ்வரேல் அவர்களை அடிக்கிறது, ஊரைவிட்டோட்டுகிறது, சமயம் நேர்ந்தால் கொல்கிறது இப்பாவங்களை நிகழ்த்தி வரும் நாட்டிற்கு உய்வுண்டா? உரிமையுண்டா? நாயகனுடன் ஒருபொழுதும் கூடி இன்பம் நுகராத பெண்மக்கள் கைம்மை நிலையெய்தினால் மீண்டும் மணஞ்செய்து கொள்ளலாகாதா? மணம் என்பது யாது? பந்தரா? கோயிலா? மந்திரமா? மாலையா? ஒருவனுடன் கூடி இன்பம் நுகரும் நாள் திருமணம் முடிந்த நாளாகும். இளமை மணத்தை விலக்காது மறுமணத்தையுந் தடுப்பது அறமாகாது" என்று கூறியதும் கவனிக்கத்தக்கது.

புண்ணிய நாடென்று போற்றப்படும் இப்பாழும் இந்தியாவில் இதினும் கொடிய இந்துமதத்தில்தான் மறுமணம் மறுக்கப்பட்டிருக்கிறது. 192[illegible]-ம் ஆண்டில் ஜனக்கணிதப்படி ஒரு வயது முதல் 15-வயது வரை விதவையாய் வாழும் இந்துப்பெண்கள் 329,076 அந்தோ கொடுமை! கொடுமை!! இக்கொடுமைக்குக் காரணம் யாது? இந்துமதமென்றே கூறவேண்டும் எனவேதான் அறிஞர்கள் "இந்து மதம் பெண் கொலை மதம்" என்று இயம்பி வருகின்றார்கள். இத்தகைய இளம் பெண்கள் மறு மணம் செய்யாவிட்டால் மக்களுக்கு இயற்கையாக உண்டாகும் இன்பவுணர்ச்சியை எவ்வாறு அடக்கிக்



கொண்டிருப்பர். நூற்றிற்கொருவராவது இருக்கமுடியுமா என்பது சந்தேகம். இத்தகைய கைம்பெண்கள் சோரத்தனமாய் விபசாரம் புரிந்து பிள்ளையுண்டாவதும், கருச்சிதைக்கும் மருந்துட்கொள்வதும் பிள்ளை பிறந்துவிடின் சங்கை நெறித்துச் சாக்கடையிலும், கத்தாழைக் காட்டிலும் வீசிவிடுவதும், வாய்க்காலிலும், ஆற்றிலும் உயிருடன் வீசிவிடுவதும் சில இரக்கமுள்ள தாய்மார்கள் மானத்தைவிட சீவகாருண்யமே பெரியது என்றெண்ணி அநாதைப் பாடசாலைகளுக்குக் கொண்டுபோய் ஒருவரும் அறியாமல் கொடுத்து வருவதும் நம் நாட்டில் நடக்கவில்லையென்று எவராவது கூறமுடியுமா? எமது திருநெல்வேலி ஜில்லாவிலே கிறிஸ்துவப் பெண்மணிகளால் டோனாவூர் என்ற ஒரு [illegible]ரில் நிறுவியிருக்கும் அநாதைப் பாடசாலையில் சுமார் 400-க்கு மேற்பட்ட குழந்தைகள் படித்து வருகின்றார்கள். இதைப்போன்ற அநாதைகளின் புகலிடங்கள் பல இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் ஏராளமான பிள்ளைகள் படிக்கின்றார்கள். எல்லாம் கிறிஸ்தவ மிஷனரிகளாலேயே நடைபெற்று வருகின்றன. ஜீவகாருண்ய மதஸ்தர்கள் என்று கூறும் இந்துக்களோ அல்லது வடிகட்டிய ஜீவகாருண்யச் சமயத்தார் தாங்கள்தான் என்று கூறும் சைவர்களோ நாட்டில் ஆண்டொன்றிற்கு ஆயிரக்கணக்காய் நடைபெறும் இச்சிசுக் கொலைகளைப்பற்றி சிறிதாவது கவலை கொள்ளுகின்றார்களா? அக்கொலைகள் நடைபெறுங் காரணங்களை அறிந்து அதற்காவன புரிந்தார்களா? அன்றேல் சிசுக்கள் கொலை செய்யப்படாமல் காப்பாற்ற அநாதை ஆச்சிரமங்கள் நிறுவியிருக்கின்றார்களா? கிறிஸ்துவர்களுக்கு இருக்கும் ஜீவகாருண்யம் இந்துக்களுக்கோ, அன்றிச்

சைவர்களுக்கோ ஒரு சிறிதும் கிடையாது என்பது எவரும் அறியக்கிடக்கும் உண்மையாகும். கிறிஸ்து மதமும், இஸ்லாமும் பெண்களிடத்தில் ஜீவகாருண்யம் கொண்டு மறுமணஞ் செய்துகொள்ள அனுமதித்திருப்பதுடன், அனுஷ்டானத்திலும் இன்றளவும் இருந்து வருவதினாலன்றோ மதங்களையே ஒழித்துவிடவேண்டுமென்று விரும்பும் சுயமரியாதைத் தலைவர்களும் அச்சமயங்களைப் போற்றி வருகின்றார்கள். (அந்தத் தலைவர்களின் சொந்த அபிப்பிராயமே யொழிய இயக்கத்தின் கொள்கையன்றென்பதை நேயர்களறிவார்களாக) எனவே ஜீவகாருண்ய சமயங்களென்று கூறிக்கொள்ளும் இந்து சமயம், சைவ சமயம் தங்கள் அழிவிற்கு முன் பெண் மக்களிடம் ஜீ...ருண்யம கொண்டு பெண் மக்களின் மறுமணத்தை அனுஷ்டான பூர்வமாய் செய்து காட்ட முன்வர அச்சமயத்தலைவர்கள் முயற்சிப்பாராக.

## பதியிலார்.

குறிப்பிட்ட கணவனின்றி கண்டவருடனெல்லாம் காம வெறிகொண்டும், பொருளாசையாலும், ஏனைய ஆசையாலும் புணர்ந்து வாழும் பெண்களையே பதியிலார் என்று ஈண்டு குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவர்களை வேசிகள், தாசிகள், தேவடியாள்கள், பொதுமகளிர்கள், வரைவின் மகளிர், கணிகையர், பரத்தையர் எனப்பலப்பல பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. இக்கூட்டம் உலகின் பலவிடங்களிலும் இருந்துவருகின்றது என்றாலும் இந்தியாவைப்போல் சரித்திர காலத்திற்கு முற்பட்டே உலகின் ஏனையவிடங்களில் இருந்து வந்ததாகத்தெ



ரியவில்லை. மேலும் உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் விபசாரிகள் தொகைகளைக்குறைக்க அந்நாட்டறிஞர்கள் நானாவி. ஆராய்ந்து சில திட்டங்கள் அமைத்து அதை அனுஷ்டித்துப் பார்த்ததில் வெற்றி கண்டுள்ளார்கள். எடுத்துக்காட்டாக சமதர்ம ஆட்சியொளிரும் ரஷிய தேசத்திலே புரட்சி நடைபெறுவதற்கு முன் மாஸ்கோ நகரில் (மட்டும்) 1,8000,00 ஜனங்கள் வசித்து வந்தனர். இவர்களின் 20000 பேர்கள் பதிவுசெய்யப்பட்ட விபசாரிகள் 1928 வருஷத்தில் ரஷியாவில் 2,500,000 பேர்கள் வசித்துவந்தனர். அப்பொழுது 3000 விபசாரிகளே இருந்தனர். இப்பொழுது மாஸ்கோ நகரில் 500 விபசாரிகளே இருக்கின்றனர். 1928வது வருஷத்திலிருந்து விபசாரிகளின் தொகை குறைந்திருப்பதற்குக் காரணம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டமின்றி யிருப்பதும் கலை வளர்ச்சிக்கு ஏற்ற சந்தர்ப்பமிருப்பதுமே. இன்னும் ஒரு வருஷத்தில் மாஸ்கோ நகரில் விபசாரிகளே இல்லாது போய்விடுகிறார்கள் என்று மான்செஸ்டர்கார்டியன் என்னும் ஆங்கில வாரப்பத்திரிகை வெளியிட்ட ஓர் கட்டுரையை சண்டமாருதம் போன்ற பத்திரிகைகள் மொழிபெயர்த்து வெளியிட்டிருப்பதை நேயர்கள் அறிந்திருப்பர். நாஸ்திகம் பரவும் ரஷியதேசத்து அறிஞர்கள் விபசாரத்தை ஒழித்து வருகின்றார்கள். ஆஸ்திகம் அளவுக்குமிஞ்சித்தாண்டவமாடும் இந்தியாவின் இந்து சைவமதங்கள் விபசாரிகளுக்கு ஆதரவுகாட்டுகின்றன. ஆண்டுகள்தோறும் விபசாரிகள் தொகை பெருகிக்கொண்டே வருகின்றது. சமயமும் அறிஞர்களும் விபசாரத்தை ஒழிக்க முன்வரும் சீர்திருத்த வாதிகளுக்கு எதிராக இருந்து வேண்டும் இன்னல்கள் புரியத்தூண்டி வருகிறார்கள்.

மற்றைய நாட்டில் விபசாரிகள் பெருகப்பலவித காரணங்களிருக்கலாம், இந்தியாவிலோ வென்றால் இளமைமணம், விதவை மணம் மறுத்தல், பெண்களுக்குப் பொருத்தா நாயகனைப்பெற்றோர் விருப்பப்படி கட்டாயமாய் மணம்புரிதல், பெண்களுக்குச் சொத்துரிமை மறுத்தல், கடவுளின் பெயரால் பெண்களுக்குப் பொட்டுக்கட்டுதல், பிறப்பையொட்டி சாதிவகுக்கப்பட்டது போல் இவ்விழிதொழில் புரிந்தோர் மக்களையும் ஒருசாதியாய் சிருஷ்டித்தல் முதலிய பெருங்குற்றங்களும் முக்கிய காரணங்களாய் மிளிர்கின்றன. இளமை மணத்தால் கணவனுடன் வெறுப்புற்றோரும், சிறுவயதில் கணவனை இழந்து வைதம்மையடைந்த மகளிரும் பெரும்பாலும் விபசாரிகளாய்ப்போகின்றனர். விதவையான பெண்களிற்பலர் தம்முன் தோன்றும் இயற்கையுணர்ச்சியை அடக்கமுடியாதவராகி பக்கத்துவீட்டுப்பையனுடனோ அன்றிதன் வீட்டு வேலைக்காரனோடோ சோரத்தனமாய்ப் புணர்ந்து கருவுற்று, கருவுற்றதை இரகசியமாய் சிதைக்க முயன்றும், பயன் படாமல் வீட்டைவிட்டோடி பட்டினங்களில் போய் குழந்தையைப் பெற்று அதனை ஆச்சிரமங்களிற் கொடுத்து விட்டுப்பகிரங்கமாய் விபசாரத்தொழிலிற் பிரவேசித்து விடுகின்றனர். பெண்டிர்கள் ஒரு புருடனைக் காதலித்திருக்க குலம், பணம், அந்தஸ்த்து முதலியவைகளை விரும்பி பெற்றோர் மகளின் விருப்பிற்கு மாறாக ஒருவனுக்கு மணஞ்செய்து கொடுக்க அப்பெண் அப்புருஷன்மேல் அன்பற்றவளாகி கலகம்பலவிளைத்து தாம் இளமையில் காதலித்தயுவனோடுசோரத்தனமாய் கூடலும், அஃதல்லாமல் கணவன பல்லிழந்த கணவனாய் வாழ்வது கண்டு வேறுதமக்கொத்த வாலிபனோடு கலத்தலும் அதை ஜனங்களறிந்து தூற்ற அப்பெண்கள் ஓடிவேறு ஊர்களுக்குப்போய் வழி



யற்று விபசாரம் புரிதலுமுண்டு. சில பெண்களுக்கு தகப்பன் சொத்திலும், கணவன் சொத்திலும் உரிமையில்லாததால் பிழைக்க வழியற்று விபசாரம் செய்து வயிற்றுப் பிழைப்பை நடத்தலும் உண்டு. ஒரு ஜாதியாரை மதத்தின் பேரால் கடவுளுக்கு மனைவியாக்கி, பின்னர் புரோகிதரும், அதன்பிறகு ஏனையோரும் புணர்ந்து கொள்ளலாம் எனச்செய்து பொருள் சம்பாதிக்கும் ஒரு கூட்டமும் நம் நாட்டிலே நம் சமயத்திலே உண்டு. ஆனால் இவைகள் எல்லாம் நம் சமயத்தின் சார்பாக உண்டாக்கப் பட்டிருப்பினும் கடைசியாகக் கூறிய பொட்டுக்கட்டும் வழக்கம் அல்லது விபசாரம் செய்ய "லைசென்ஸ்" கொடுத்தலென்னும் கொடுஞ்செயலே சமயத்துடன் நேரடியாகச் சம்பந்தம் கொண்டதென்று சைவ சமயத் தலைவர்களே ஒத்துக்கொள்ளுகின்றார்கள்.

ஒரு காலத்தில் விவாகத்தில் விருப்பமில்லாத பெண்களும், இளமையில் விதவையான பெண்களும், திருமணவாழ்விற்குரியரல்லாத மகளிரும் கோயில்களில் சென்று ஆண்டு மெழுக்கிடல், பூக்கொய்தல், கோலமிடல் முதலிய பல்வேறு தொண்டுகள் செய்துவந்தனரென்பதற்குப் பண்டைக்காலத்து நூற்கள் சான்று பகர்கின்றன. திருநாவுக்கரசு நாயனார் சகோதரியாம் "இளம் விதவை திலகவதி, பாவையார் போன்ற பலரும் கோயிலிலே திருப்பணி செய்துகொண்டிருந்தார்கள் என்று நூல்கள் தெரிவிக்கின்றன. இத்தகையோரைத்தான் ஆதியில் தேவடியாள், தாசியென்று அழைக்கப்பட்டது என்று பல அறிஞர்களும் கூறுகின்றனர்; அச்சொற்களின் பொருளும்

நமக்கு இக்கருத்தை நன்கு எடுத்து காட்டுகின்றது என்பதை எவரும் அறிவர். இப்பணி புரியும் மகளிர்கள் கோயில்களில் ஆடலும், பாடலும் புரிந்தும் வந்திருக்கின்றனர். இது கோயிலில் நடக்கும் பூஜையின் ஓர் அங்கம். இதைப்பற்றி மிக விரிவாய் சென்னை சட்டசபையில் திரு. முத்துலட்சுமி அம்மையாரின் பொட்டறுப்பு மசோதாவையெதிர்த்து, திரு. சத்தியமூர்த்தி பேசியதும், அதற்கு அம்மையார் "பூஜை செய்தலென்னும் புண்ணியத் தொழிலைச் செய்யும் பார்ப்பனர் பூஜையின் ஓர் அங்கமாகிய ஆடல்பாடல்களையும் மற்றும் தொழிலையும் பார்ப்பனச் சோதரிகளைக் கொண்டே செய்து அப்புண்ணியத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடாதா? அதற்காக ஏன் ஒரு ஜாதியாரை ஏற்படுத்தி அவர்களைக் கட்டாயப்படுத்த முயற்சிக்கிறீர்கள்" என்று கொடுத்த சாட்டையடியும் லோகப் பிரசித்தியானது.

நிற்க இத்தகைய கோயிற்றிருப்பணி புரிந்து வந்த பெண்கள் கோயில் அர்ச்சகர், தர்மகர்த்தர்கள் முதலியவர்களோடு அடிக்கடி பழக நேர்ந்தது. இப்பழக்கம் முதிர்ந்து நாளடைவில் அப்பெண்கள் சோரத்தனம் புரிய ஆரம்பித்து விட்டனர். பிழைக்க வழியற்ற சில சோம்பேறிக் கூட்டம் சிவவேடந் தாங்கி கோயில்கள்தோறும் சென்று பக்தியுடன் தீர்த்தஸ்தல யாத்திரை வருவதுபோல் பாசாங்கு காட்டி தாங்கள் முற்றத்துறந்த முனிவர்கள் போன்று பாவனை காட்டி கோயில்களில் திருப்பணி செய்துகொண்டும், பாடிக்கொண்டும் ஆண்டுவதியும் தேவடியாள்கள் மீது கண்ணோட்டஞ் செலுத்திவருவதும் நாளடைவில் இருவர் மனமும் ஒருமைப்பட்டு காதல் ததித்து மெய்யுறு



புணர்ச்சியிலிறங்குவதும், பல பெண்கள் இச்சிற்றின்பத்தை நுகர்ந்து பேரின்பமடைதலே நமது பிறவியின் நோக்கம் என்ற மனப்பான்மையையுடையவராயினும் சிவனடியார்களின் காம வேட்கையைத் தணிப்பது சிவப்பணியென்றும், அது மோட்சத்தைக்கொடுக்கவல்லதென்றும், சிவனடியார்கள் விருப்பிற்கு மாறாக நடப்பவர்கள் பெரு நரகத்தையடைவரென்றுங்கொண்ட நம்பிக்கையினால் விலைமகளிர்கூட்டம் நாட்டில் பெருகிவிட்டது. (இக் கொள்கையைப் பெரிய புராணத்தில் நன்கு காணலாம்.)

கடவுள் பெயரால் விபச்சாரம்புரியும் இக்கூட்டத்தை ஒழிக்க சமூக சீர்திருத்த அறிஞர்கள் செய்யும் நன்முயற்சிக்கு சமய பக்தர் இடையூறு புரிவதோடு இந்த விபசாரக் குழுவிற்கு வைதிகப்புலிகள் உற்சாகமூட்டி வருகின்றனர். சைவப் பெரியார்களெல்லாம் தங்கள் ஆஸ்திகத்திலுள்ள ஆலயத்தில் கூட, ஆடலும் பாடலும் புரிய அநுமதிப்பதுடன் தங்கள் வீட்டில் நடைபெறும் திருமணம், பூப்புநீராட்டு விழா முதலிய பல விழாக்களுக்கு இவ்விலைமகளிரை அழைத்து ஆடல் பாடல் புரியச் செய்து பெரும் பொருள் ஈதலும், அக்குடும்பத்திலுள்ள முக்கியஸ்தர்கள் அவ்விலை மகளிரிடம் தம் இச்சையை நிறைவேற்றிக் கொள்வதும் ஒரு பெரும் பெருமையாக நினைத்து வாழுகின்றார்கள்.

விபசாரம்பெருகுவதால் நாட்டின் நன்மையைத் தாங்கிநிற்கும் பிரதான தூண்களிலொரு பகுதியாகிய பெண்களிற்பலர் விபசாரத்திலீடுபட்டு நோய் வாய்ப்பட்டல்லற்படுவதோடு, அந்த நோய் அவர்களுடன் கலந்த ஆண்களுக்கும் பற்றிப் பின்னர் அவர்களின் மனைவிமார்களுக்கும்,

பிறகு அவர்களின் வம்சங்களுக்கும் அந்நோய்பிடித்து நாளடைவில் இந்தியாவே ஒரு நோய் கொண்ட தேசமாய் விடுமென்பதற்கு யாதொரு ஐயமுமின்றாகும். அப்பெரும் நோய் நாளடைவில் பெருகிவருகின்றதென்பதை கன்னி மேயோ போன்றவர்கள் கூறுவதை மறுப்பினும் சைவப் பெரியார் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கள் தம் பெண்ணின் பெருமை என்னும் நூலில், "பதியிலார் என்னுங் குலத்தவர்மட்டும் இப்பொழுது விலைமகளிராவோரில்லை. வேறு பல குலத்தினின்றும் பல காரணங்களால் ஒதுக்கப்பட்ட சகோதரிகளும் விலைமகளிராகிறார்கள். நாளுக்கு நாள் விலை மகளிர்கூட்டம் பெருகுகிறது. அத்தொழிற்கென வீடுகள், விடுதிகள் வாணிபங்கள், தரகுகள் முதலியன ஏற்பட்டிருக்கின்றன. இதற்கு வறுமை ஒரு காரணம். பொதுவாக நாட்டில் சிறப்பாக இந்து மதத்தில் பெண்ணுலகிற்கு ஏற்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மற்றொரு காரணம். தற்கால நாகரீகம் இன்னொரு காரணம். வேறுசில காரணங்களுமுண்டு" என்று கூறுவதை ஆஸ்திகரென்று கூறிக்கொள்பவர்களில் யாரே மறுக்கவல்லார். இவ்வித விபசாரப்பெண்களால் நாட்டிலுள்ள மக்களை மேகரணம், அரையாப்பு, கிரந்தி முதலிய கொடிய நோய் பற்றி மக்களுயிருக்கு ஊறு செய்கின்றது. அதனின்று தப்புவோரும் கூட நடைப்பிணங்களாய் வாழுகின்றனர். விலை மகளிர்க்காக ஆண் மக்களிற் சிலர் போடும் போட்டியினால் நாட்டிலுண்டாகும் கொலைகளோ அனந்தம். இதனாலேற்படும் போர்களும், பொறாமைகளும் பண விரையமும் தற்கொலைகளும், மருந்திடுகளும் ஏனைய கொடுஞ் செயல்களும் அம்மம்மா! சொல்லத்தரமன்று. விபசாரம் நாளடைவில் இவ்வுலகிலேயே பல மக்களை எரிவாய் நரகிடைக்கிடந்துழலும்படி



செய்துவிட்டது. விலைமகளிர் வீட்டில் பிறந்த பெண்டிர் ஒருவனை மணந்து ஒழுங்காய் இல்லறம் நடத்தவிரும்பினும் அவர்களை சாதிவெறி, சமயவெறி கொண்ட மக்கள் முன் வந்து வருத்துவதனால் அம்மகளிரும் வேறுவழியற்று விபசாரத்தில் ஈடுபடுவதை நீக்கப் போதிய முயற்சிகள் நடைபெறவில்லை. தற்சமயம் விபசாரத் தொழிலிலீடுபட்டிருப்பவர் தாம் புரியும் தொழில் தீதானது என்றுணர்ந்து அத்தொழிலை விட்டுவிடினும் அவர்களுக்கு வேறு கைத்தொழிலோ, கல்வியோ கற்பித்து உணவீந்து காப்பாற்றத்தக்க அறச்சாலைகள் நிறுவ நமது ஜீவ காருண்ய மதம் இடந்தரவில்லை. தலைவர் மனம் விசாலமடையவில்லை. சீவகாருண்ய சங்கங்கள் இத் தொண்டில் இறங்க விருப்பப்படவில்லை. பணக்காரர் உளம் இவ்வறப்பயனைப் பெற விரும்பவில்லை. கொடுஞ் செயல்கள் பெருக நம் இந்து சமயமும், சைவசமயமும் இடங் கொடுக்கின்றதேயொழிய நம்மிடையே வாழும் கிறிஸ்துவர்கள் முஸ்லிம்களிடையே இவ்விபசாரிகள் கூட்டம் பெருகாதிருக்கின்ற காரணத்தையும் சீவகாருண்ய சமயத்தார் என்று கூறுபவர்கள் ஆராய்ந்து பார்க்கட்டும். அவர்களின் சமயம் விபசாரத்திற்கு எட்டுணையும் இடங்கொடுக்காதிருப்பதுடன் விபசாரம் பெருகக் காரணமாகவுள்ள செயல்கள் அனைத்தையும் அச்சமயத்தில் வேரூடன் களையப்பட்டிருக்கிறதென அறிந்து பெண்களிடத்தில்—இல்லை—இந்தியாவினிடத்தில் சீவகாருண்யம் காட்டி விபசாரத் தொல்லையையொழிக்க சமயத் தலைவர் முன் வருவார்களா?

---

# சொத்துரிமை.

---

பெண் மக்கள் அடிமை வாழ்க்கையில் ஈடுபடுவதற்கும் விபசாரத் துறையிலிறங்கு வதற்கும் முக்கிய காரணம் பெண்களுக்குச் சொத்துரிமை யில்லாததேயாகும். பெண்களுக்குச் சொத்துரிமை இருந்தால் அவர்களின் பிள்ளைகள் நான் இன்னான் மகன் என்று கூறாது, நான் இன்னாள் மகன் என்று கூறுவர். பெண்களுக்குரிமையுள்ள நாடுகள் பலவற்றில் முற்காலத்திலும், இக்காலத்திலும் ஆண்மகன் தான் இன்னாள் மகன் என்றே கூறி வந்திருக்கிறான். இதுவே ஒழுங்கும் நீதியுமாகும். இவ்வாறு பெண்களுக்குச் சொத்துரிமை மறுக்கப்பட்டதினால் சிற்சில சமயங்களில் கோடீஸ்வானின் மகளும் பிச்சைக்காரியாய் தெருவினின்று தியங்கித் தவிக்க வேண்டியதிருக்கிறது. சிறு வயதில் தந்தைக்கும், பின்னர் தன் சகோதரர்களுக்கும், மணமான பின் கணவனுக்கும், கணவனிறந்த பின் மக்களுக்கும், மக்களும் கணவனுமின்றேல் தன் சோதரன் வீட்டையடைந்து தன் நாத்திமார் இடும் சோற்றையுண்டு யாதொரு உரிமையுமற்ற அசேதனப் பொருளைப்போல் வாழ வேண்டியதிருக்கிறது. தெளிவாய்க்கூறினால் மிருகம், பறவை முதலியவைகளின் பெண்களினங்கள் அநுபவிக்கும் உரிமையும் இன்றைய ஆறறிவுடைய பெண்களுக்கில்லை.

“பொருளிலார்க் கின்பம் இல்லை;
புண்ணியமில்லை; என்றும்
மருவுறு கீர்த்தியில்லை; மைந்தருட்பெருமையில்லை



கருதிய கருமம் இல்லை; கதிபெறுவழியும் இல்லை,
பெருநிலத்திடை நடக்கும் பிணமெனப்
படுவரன்றே.”

என்ற முதுமொழிப்படி இவ்வுலக வாழ்வில் மகளிர் சொத்துரிமையில்லாமல் எவ்வித இன்பமும் நுகர்ந்து இனிது வாழ முடியாது நடைப்பிணங்களாய் வாழ்ந்து வருகின்றார்கள் என்பது மெய்யே. பண்டைக்காலச் சரித்திரங்கள் சிலவற்றில் சிற்சிலவிடங்களில் பெண்கள் சொத்துரிமை பெற்று வாழ்ந்தனர் என்பது வரலாற்று நூற்கள் மூலமாய் நாம் அறிந்தாலும் பிற்காலத்தே தோன்றிய மதச்சட்டங்களால் தன்னலங்கொண்ட ஆண் மக்கள் பெண்ணுரிமை கடிந்து அவர்கள் எக்காலமும் அடிமையாய் [illegible] உரிமையற்ற பேடிகளாய் வாழும்படி செய்திருக்கிறார்கள் என்பதை யூகித்தறியலாம். இவ்வரிய பெண் உரிமையில் ஆண் மக்கள் மண்ணையள்ளிப்போட்டு விட்டதினால் பெண் சுதந்திரமிழந்து நாயினும் கடையாய் மதிக்கப்படுதற்கு ஏதுவாயிற்று. இந்து புண்ணிய நாடாகிய ? இப்பரத கண்டத்திலே ஜீவனாம்ச வழக்குகளென்று கணக்கற்ற தாவாக்கள் நடைபெறுகின்றன. அவைகளினால் கோடிக்கணக்கான ரூபாய் விரையமாகின்றது. இவ்வீண் விரயத்திற்குக் காரணம் பெண்ணிற்குச் சொத்துரிமையில்லாத பெருங்குறைவல்லவா? இவைகளையெல்லாம் ஓர்ந்து சில சீர்திருத்த வாதிகள் பெண்களுக்குச் சொத்துரிமை வழங்க வேண்டுமென்று கூறினால் வைதீகப் பேய்கள் பெருங்கூப்பாடு போட்டு “பெண்களுக்குச சொத்துரிமை வழங்கவா? அவ்வுரிமை வழங்கினால் உலகமே கெட்டுப்போய்விடும். பெண்கள் ஆண்களுக்கு அடங்கி நடக்கமாட்டார்கள். காலம் கெட்

டுப்போய்விட்டது. எல்லாம் கலிகாலக்கூத்து'' என்றெல்லாம் சொல்லுகிறார்கள். சட்டஞ்செய்ய முனைந்தால் சூழ்ச்சி முறையால் அதற்கு ஊறுவிளைப்பதோடு அந்தவழியில் ஈடுபட்ட சட்டசபை அங்கத்தினர்கள் பின்னர் சட்டசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படாது தங்களுக்குரிய எல்லாச்செல்வாக்கையும் உபயோகித்துச்சீர்திருத்த வாதிகள் தோல்வியடையும்படி செய்து விடுகின்றார்கள். இவ்வைதீகக்குழுவினர் தாம் தங்களைப்பெரிய சமய பக்தர்கள் தேசியத்தலைவர்கள் என்று கெம்பீரமாக கூறிக்கொள்வதோடு தம் தீய கொள்கைகளை, சமூகச்சீர்திருத்தத்திற்காக ஆரம்பிக்கப் பெற்ற பத்திரிகைகள் என்று கூறி சமூகச்சீர்திருத்தத்திற்கு விரோதமாய் தேசியப்பிரசாரமும், சமயப்பிரசாரமும் செய்துவரும் பத்திரிகைகளில் எழுதி நாடெங்கும் பரப்பி வருகின்றனர்.

வடநாட்டு மாதர்கள் தேசியத்திற்கு விரோதமாய்ப் பேசும் ஆண்களுக்கு வளையல் வழங்கினார்கள். ஆனால் தமிழ் நாட்டில் மகளிரின் ஜீவாதாரமான உரிமைகளுக்கெல்லாம் விரோதமாய்ப்பேசியும், எழுதியும் வரும் தேச பக்தர்களுக்கும், சமய பக்தர்களுக்கும் வளையல் வழங்கியும், பொதுக்கூட்டங்களில் பேசவொட்டாது அவர்களை மறியல் செய்யவும் துணியாதது தமிழ்நாட்டு மாதர்களின் தைரியக்குறைவும் உரிமை வேட்கையின் குறைவும் ஆண்மக்கள் (சீர்திருத்த வாதிகள்) பெண்களுக்குக்கூறும் உற்சாகக்குறைவும் பெருங்காரணங்களாகும். நாட்டிலே சீவகாருண்ய மதங்களென்று கூறிக் கொள்பவைகள் சொத்துரிமையை மகளிர்க்கு மறுத்துக்கொண்டு தன்னைச்சீவகாருண்ய மதம் என்று கூறிக்கொள்ள அம்மதத்திற்கு (மத பக்தர்களுக்கு) ஒரு சிறிதும் வெட்கமில்லையா?



இனி நாட்டில் எம்மதமும் தன்னை ஜீவகாருண்ய மதம் என்று சொல்லிக்கொள்ள விரும்பினால் பெண்களின் நியாயமான உரிமைகளையெல்லாம் உடனே அளித்து விட வேண்டும். இன்றேல் மக்களுக்கு இத்தனை ஆண்டுகளாய் இயற்றி வந்த கொடுஞ்செயலால் கொதித்துள்ள மாதருலகம் அதிசீக்கிரம் மதமொழிப்பு வேலையிலிறங்கி விடும். அவ்வாறு செய்யவேண்டியது நீதியேயாகுமென்று சமரச மனப்பான்மையையுடைய தக்கோர்கள் எவரும் சாற்றுவர். நீதி நெறியைக் கடைப்பிடித்தொழுகும் அறிவோர் எவரும் பெண் உரிமையை மறுக்கும் வேதங்களையும் அச்சாஸ்திரங்களையும் சுட்டுப் பொசுக்க ஆரம்பிப்பர்.

பெண்களிடம் ஒரு சிறிதும் காருண்யம் காட்டாத மதச்சட்டத்தின் பேராலும், அரசாங்கத்துச் சட்டத்தின் பேராலும் பெண்ணுரிமைக்கு முற்றாய்க்கேடுபுரிந்து அவர்களை அடிமைத்தளையினால் சிறைப்படுத்தி விட்டு இன்றைய ஆணுலகம் விடுதலை விடுதலையென்று கூறியும், வேதங்கள் எவ்வுயிர்களையும் தெய்வமாய்ப் போற்றி எழுதியிருப்பதாகக்கூறித் திரிகின்றார்கள். அவர்களைக் கண்டித்தே தேசியக்கவிஞர் பாரதியார்.

''பெண்ணுக்கு விடுதலையென்றிங்கோர் நீதி
பிறப்பித்தேன் அதற்குரிய பெற்றிகேளீர்
மண்ணுக்குள் எவ்வுயிருந் தெய்வமென்றால்
மனையாளுந்தெய்வமன்றோ? மதிகெட்டீரே?
விண்ணுக்குப்பறப்பதுபோற் கதைகள் சொல்வீர்,
விடுதலையென்பீர் கருணைவெள்ளமென்பீர்
பெண்ணுக்கு விடுதலை நீரில்லையென்றால்
பெண்டாட்டிதனை யடிமைப்படுத்தவேண்டிப்''

"பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ
பின்னிந்த வுலகினிலே வாழ்க்கையில்லை"

என்று கூறியிருப்பவைகளையெல்லாம் தேசியப்புலிகள் என்போர்களும், சீவகாருண்யச் சமயத்தைச் சார்ந்தோர் என்று கூறும் வைதீகச் சைவரும் நன்கு ஆராய்ந்து பார்ப்பார்களாக.

ஜீவகாருண்ய மதங்கள் என்று கூறிக்கொள்பவைகள் பெண்களுக்குள்ள இயற்கை உரிமையாகிய கலப்பு மணம், காதல்மணம், மறுமணம், விவாகரத்து, சொத்துரிமை முதலியவைகளையும், இன்னும் பலவற்றையும் மறுத்துவருவதுடன் இளமை மணத்தால் அவர்களை வருத்தியும், பொட்டுக்கட்டி விபசாரஞ்செய்யத் தூண்டிப் புண்ணும் பொடியும் பெற்று இவ்வுலகிடையே அவர்களை எரிவாய் நரகில் வீழ்ந்து தவிக்கவும், சென்ற நவம்பர் மாதம் 16-ம் நாள் வெளியான "சண்டமாருதத்தில்" 'கேதாரநாத் என்னும் பார்ப்பான் தனது 10 வயது மனைவியாகிய ராமகாளி என்னும் சிறுமியை பலவந்தமாகவும் இயற்கைக்கு விரோதமாயும் புணர்ந்து அதனால் பல தொல்லைகளுக்குட்பட்டு நோயுற்ற 4-அடி உயரமும், 44-பவுண்டு நிறையுமுள்ள அச்சிறுமி நடக்கமுடியாது தன் இரு கரங்களாலும் இரு முழங்கால்களாலும் நகர்ந்து சர்க்கார் ஆஸ்பத்திரிக்கு வந்து சிகிச்சை செய்ய வந்ததும் பின்னர் கேஸ் நடைபெற்று, அவளை பலவந்தமாய்ப் புணர்ந்த புருஷனுக்கு 10-வருஷம் நியாயாதிபதியால் கடுங்காவல் தண்டனையடைந்ததுபோன்ற சம்பவங்கள் பல நடைபெற்று வெளிக்குத் தெரியாமல் மறைந்துபோயிருக்கின்றன" என்று கூறியிருப்பதும் கவனிக்கத்தக்கது.



இவ்வனியாயக் கொடும் இளமை மணத்தினால் படுக்கையறையிலேயே பல சிறுமிகள் உயிர் நீத்திருக்கின்றனர். சீவகாருண்ய மதங்கள் பெண்களுக்கு எத்துணையோ கொடுமைகளும், பங்கமும் புரிந்துவருகின்றன.

ஒவ்வொரு நாட்டின் உயர்வும் அந்நாட்டிலுள்ள பெண்களின் நாகரிகத்தைப் பொறுத்தே முடிவு செய்யப்பட[illegible]னவேதான் மேனாட்டறிஞர்களெல்லாம் பெண்ணுரிமைகளையும[illegible] நாட்டு மக்களையும், மதங்களையும் நாகரீக நுட்பமுணராத மிலேச்சர், அஞ்ஞான மதங்கள் என்றெல்லாம் இழிவுபடுத்திக் கூறிவருகிறார்கள். மேயோபோன்ற பெண்மணிகள் பெண்ணுரிமை மறுக்கும் இந்திய நாட்டு மதங்களையும், மக்களின் தன்மையையும் பற்றி மிக இழித்துக் கூறி எழுதிய புத்தகங்கள் இலட்சக்கணக்காய் விற்றுவருகின்றன. நமது தேசிய வீரர்களும், வைதீகத் தலைவர்களும் மேயோ பேரில் சீறி விழுந்தார்களே ஒழிய அவர்கள் கூறிய முறைகள் உண்மைதானா? என ஆராய்ந்து அதை நீக்க முயற்சித்தார்களாவென்றால், ஒரு சிறிதுமில்லையென்ற பதிலே கிடைக்கும். உரிமையற்ற நடைப்பிணங்களாகிய மகளிர்களின் வயிற்றில் தோன்றிய ஆண் மக்கள் எவ்வாறு சுதந்திர உணர்ச்சியுடன் உரிமை பெற உயிரைத் தியாகம் செய்யக்கூடிய வீரர்களாய் வரக்கூடும். தேசிய விடுதலைக்காதலால் காந்தியவர்களால் 'காந்தீயம்' என்று இவ்விருபதாம் நூற்றாண்டில் நிறுவிய புதிய அஹிம்சா தாமம் என்ற மதத்தின்படி எழுதும் சீவகாருண்ய சமயத்தார் ஆராய்ந்து பார்க்கட்டும். 'பெண்கள் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி, இடுக்கணுமின்றி பிறப்புரிமை இன்பத்தை எங்கே நுகருகிறார்களோ அங்கேயுள்ள ஆண் மக்கள் நகரீக நுட்பமுணர்ந்தவர்களா

கிறார்கள். அந்நாடே நாகரீகம் பெற்ற நாடாகும்" என்றும் "பெண்ணுரிமை பொதுவாக உலகில் பலவிடங்களிலும் சிறப்பாகச் சிலவிடங்களிலும் பின்னை நாளில் கடியப்பட்டது. உரிமையுள்ள நாடுகள் செழுமையுற்றிருப்பதும், அவ்வுரிமையில்லா நாடுகள் செழுமையற்றிருப்பதும் கண்கூடு. தென்னாட்டில் தாயகலான் அடிமைப்படுமிடம் அடிமைப்படலியல்பு" என [illegible]இய" மதத்தைச் சார்ந்த அன்பர் திரு [illegible] கல்யாண[illegible]தர முதலியாரவர்கள் [illegible]தையும் தமிழ் நாட்டுத்தேசிய வீரர்களாகிய காந்தி பக்தர்கள் ஆராய்ந்து பார்க்கத்தக்கது.

உரிமையற்றோர் எந்நாட்டினராயினும் தன் மதிப்பிழந்தவராகவே கருதப்படுவர். உலகிலே வலிமையுள்ளோர் வலிமையற்றவர் உரிமைகளைப்பறித்து அவர்கள் உழைப்பால் தாம் சுகமடைந்து வாழலாம் என்ற பேராசையாலே நாட்டில் "அடிமை" வாழ்வென்று ஒரு பேச்சுத்தோன்றியது. இப்பொழுது இந்தியாவிலே நமது தாய்மார்களின் சோதரிகளின் மனைவிமார்களின் உரிமைகளைப்பறித்து அவர்களுக்கு உரிமை கொடுத்தால் அவர்கள் புருஷனுக்கடங்கி நடக்க மாட்டார்கள், விபசாரிகளாய்ப்போய் விடுவர். கற்பென்பது இல்லாமல் போய்விடும்; என்றெல்லாம் கூறி பெண்களின் உரிமைக்குக்கேடு சூழும் நாம் தேசிய விடுதலையடைந்து சுதந்தரம் பெற விரும்பி கிளர்ச்சி செய்யும்பொழுது வெள்ளைக்காரன் இந்தியர் சுயராஜ்யமடைய இப்பொழுது லாயக்கில்லை; இன்று நாங்கள் உரிமை கொடுத்துவிட்டால் நாளையத்தினம் தங்களுடன் வாழும் தாழ்த்தப்பட்ட சோதரர்களைத் துன்புறுத்துவர். பக்கத்து தேசத்திலுள்ளவர்கள் படையெடுத்து



வந்தால் தன்னைக் காத்துக்கொள்ளும் சக்தி இந்தியர்களுக்கில்லை; ஆகையால் இந்தியா உரிமை பெற இப்பொழுது லாயக்கில்லையென்று கூறினால் சீறியெழும் தேசபக்தர்கள், பெண் மக்களுக்கு நீவிர் உரிமை பெற லாயக்கில்லை என்று கூறிய தன் கொடுமொழியை நினைத்துப் பார்ப்பதில்லை. ஒருவர் உரிமைக்கு மற்றொருவர் கேடு சூழ்வதினும் கொடுஞ்செயல் உலகில் இல்லை. தான் அனுபவிக்கும் உரிமை பிறருக்கு வழங்க மறுப்பவன் மனிதனாகான்." வலிமையுள்ள ஆண்மகன் இந்தியாவில் வலியற்ற பெண்களின் உரிமையைப் பறித்து அவர்களை அடிமையாகிய கொடுஞ்செயலுக்காக பலமற்ற இந்தியர்களை வலிமையுள்ள வெள்ளைக்காரன் உரிமை கடிந்து, அடிமையாக்கி அடக்கியாளும்படி இறைவன் செய்துள்ளான். போலும்' என்று ஆஸ்திக அறிஞர் கூறுகின்றது பெரிதும் கவனிக்கத்தக்கது.

தோழர்களே! உலகிலுள்ள பல்வேறு சமயங்களும் தங்களைச் சீவகாருண்ய நெறியென்று கூறிக்கொண்டு பெண் மக்கட்குக் கடவுள், வேதம், மதம், சாஸ்திரம் முதலியவற்றின் பேரால் செய்துவந்த கொடுமைகளைப் போலவே, பெண்ணுரிமைக்குக்கேடு செய்துவரும் "காந்தீயம்" என்ற போலி மதத்தையும் ஒழிப்பதோடு ஆணும், பெண்ணும் சமத்துவ உரிமை பெற்று உலகிலுள்ள எத்தேசத்தவருடனும் சமத்துவமாய் வாழத் "தன்மதிப்பியக்கம்" தோன்றி மக்கள் முன்னேற்றத்திற்கு இடையூறாய் நிற்கும் அனைத்தையும் ஒழித்து நாடெங்கும் கலப்பு விவாகம், விதவை மணம், காதல் மணம் பெருக்கி, இளமை மணம், இணக்கமற்ற மணம் முதலியவற்றையொழித்து, பணக்காரன் ஆதிக்கத்தை வேரு

டன் கல்வி உயர்வு தாழ்வுகளை வெட்டிவீழ்த்தி யாண்டும் சீவகாருண்யம் பொங்கி சமத்துவம், சகோதரத்துவம், சுதந்தரம், வீரம், பகுத்தறிவு முதலிய உணர்ச்சிகளை உண்டாக்க 'சுயமரியாதை இயக்கம்' சண்டமாருதம் போல் எங்கும் வீசி குடி அரசு நிறுவ முரசறைந்து வருகின்றது. எனவே அன்பர்களே! இவ்வியக்கம் வெற்றி பெறுவிடில் இந்தியாவிற்கு விடுதலையில்லை. தேசம் விடுதலையடைய நமது சகோதரர்களாகிய தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்கும் உரிமையிழந்த சகோதரிகளுக்கும் நீதி வழங்க முதலில் முயற்சிப்போமாக. அதுவே விடுதலை. அதுவே சீவகாருண்யம். அதுவே நமது தேசப் பணி. உலகப்பணி.

பெண்ணிற்கு ஞானத்தை வைத்தான்—புவி
பேணிவளர்த்திடுமீசன்
மண்ணுக்குள்ளே சில மூடர்—நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்.
கண்களிரண்டினி லொன்றைக்—குத்திக்
காட்சி கெடுத்திடலாமோ?
பெண்களறிவை வளர்த்தால்—வையம்
பேதைமை யற்றிடுங் காணீர்." (பாரதியார்)

76992
35

# பகுத்தறிவு நூற்பதிப்புக் கழக வெளியீடுகள்.

| | | | |
|---|---|---|---|
| 1. [illegible] (ஈ. வெ. ரா.) | 0 | 5 | 0 |
| 2. [illegible] மதம் [illegible] | 0 | 5 | 0 |
| 3. [illegible] | 0 | 3 | 0 |
| 4. [illegible] என்றால் என்ன? | 0 | 2 | 0 |
| 5. [illegible] | 0 | 6 | 0 |
| 6. [illegible] செய்த [illegible] என்ன? | 0 | 3 | 0 |
| 7. [illegible] | 0 | 2 | 0 |
| 8. [illegible] | 0 | 3 | 0 |
| [illegible] (ஈ. வெ. ரா.) | 0 | 3 | 0 |
| [illegible], பெண்களும், [illegible] | 0 | 3 | 0 |
| [illegible] | 0 | 3 | 0 |
| [illegible] (ஈ. வெ. ரா.) | 0 | 6 | 0 |
| [illegible] I. | 0 | 6 | 0 |
| II. [illegible] | 0 | 6 | 0 |
| [illegible] | 0 | 4 | 0 |
| [illegible] | 0 | 4 | 0 |
| [illegible] சரிதம் | 0 | 4 | 0 |
| [illegible] | 0 | 4 | 0 |
| [illegible] | 0 | 3 | 0 |
| [illegible] | 0 | 5 | 0 |

கிடைக்குமிடம்:—

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம், ஈரோடு.